
சுவடி : 43
ஏடு : 4
அக்டோபர் 2018
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**72992 14554**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly
@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

ஆசிரியவுரை

# இந்திய அரசியல் சட்டத்தில், மாநிலங்களிடமிருந்த கல்வி உரிமை மீண்டும் மாநிலங்களுக்கு மாற்றப்பட வேண்டும்!

வெள்ளையர்கள் 15.8.1947இல் இந்தியா விலிருந்து வெளியேறினர்.



சுதந்தரம் வேண்டிப் போராடிய காந்தியாரும் காங்கிரசும் வெள்ளையர் வெளியேறியவுடன், வயது வந்த எல்லோருக்கும் வாக்குரிமை அளித்து, அவ்வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியச் சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் மாகாணச் சட்டசபைகளின் உறுப்பினர்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய அரசியல் நிர்ணய சபை தான், சுதந்தர இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தை வரையும் என்று, 1936க்கு முன்னரே வாக்குக் கொடுத்தனர்.

15.8.1947இல் இந்தியாவின் மக்கள் தொகை 30 கோடி. இதில் மத்திய சட்டசபைத் தேர்தலில் வாக்குப் போட 40 விழுக்காட்டு பேர்களுக்கே உரிமை உண்டு. மாகாண சட்டமன்றத் தேர்தலில் வாக்குப்போட 14 விழுக்காட்டுப் பேர்களுக்கே தகுதி உண்டு.

இவ்வாக்காளர்களைக் கொண்டு 1946இல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியச் சட்டசபை உறுப்பினர்கள், மாகாணச் சட்டசபைகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய அவையையே - "அரசியல் நிர்ணய சபை" என்று உலகுக்கு அறிவித்து விட்டு, 9-12-1946 முதல் 26-11-1949 வரையில் அந்த அவையைக் கொண்டு "இந்திய அரசியல் நிர்ணய சபை"யைத் தொடர்ந்து நடத்தி, இந்திய அரசியல் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இது காங்கிரசு அளித்த வாக்குறுதிக்கு எதிரானது என்று கூறி, "இது மக்களுக்கு எதிரான சட்டம்" என்று கண்டித்த ஒரே தலைவர் பெரியார் ஈ.வெ.ரா. தான்.

இந்தச் சட்டத்தை எழுதத் தொடங்குவதற்கு முன்னரே, பண்டித நேரு தலைமையில் ஒரு குழு இயங்கியது. அது வெனிகல் நரசிங்கராவ் (B.N. Rau) என்பவரை உலக நாடுகள் பலவற்றுக்கு அனுப்பி - அமெரிக்கா, இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்சு, செர்மனி நாடுகளிலிருந்து தங்களுக்குப் பிடித்தமான பகுதிகளைப் படி எடுத்துவரச் சொல்லி, அவற்றை வைத்து, "இந்திய அரசியல் சட்ட முதலாவது வரைவு (The First Draft of the Indian Constitution)" என்பதை எழுதி, அச்சடித்து, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் கையில் 18.10.1947இல் தந்தனர்.

அதாவது, பி.ஆர். அம்பேத்கர் தலைமையில் 29.8.1947இல் அமைக்கப்பட்ட அரசியல் சட்ட வரைவுக்குழு கூடும் முன்னரே - தாங்கள் வரைந்த முதலாவது அரசமைப்புச் சட்ட வரைவைத் திணித்தனர்.

அந்த வரைவில், ஏற்கெனவே பி.என். ராவ், அயர்லாந்து அரசியல் அமைப்புச் சட்டத்திலிருந்து, "அரசின் சமூக நெறி குறித்த கொள்கைகள் (Directive Principles of Social Policy)" என்ற பகுதியைத் தனக்கு வசதியான தன்மையில் அமைத்தார். இது உள்நோக்கம் கொண்டது.

ஏன்?

பிரிவு 37 : "ஒவ்வொரு குடிமகனும் இலவசத் தொடக்கக் கல்வி பெறுவதற்கு உரிமை உடையவர் ஆவார். இந்தச் சட்டம் நடப்புக்கு வந்த நாளிலிருந்து

எல்லாக் குழந்தைகளுக்கும் - அவர்கள் 14 வயது அடைவதற்குள் இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வி அளிக்கப்படுவது அரசின் கட்டாயக் கடமையாகும்.'' "...and it shall be the duty of the State to provide" என்று அயர்லாந்து அரசியல் சட்டத்தில் உள்ளது.

ஆனால் 1948 ஆண்டைய இந்திய அரசியல் சட்ட வரைவில் விதி 36இல், the State shall endeavour என்றும், 26.11.1949 வரைவில், பகுதி 4-இன்கீழ், விதி 45இல் ''the State shall endeavour'' என்றும் மட்டும் உள்ளது.

அதாவது, ''அரசு முயற்சிக்கும்'' என்றே உள்ளது. இது குறைபாடு உள்ளது.

மக்களிடம், ''கல்வி அடிப்படை உரிமை பகுதியில் இருக்க வேண்டும்'' என்கிற கோரிக்கை வலுத்தது. அதை முதன்மையாக வைத்து, 45வது விதியில், ''6 வயது வரையில் உள்ள, குழந்தைகளுக்குக் பத்தாண்டு களுக்குள் கட்டாயக் கல்வி தரவேண்டும்'' என்றும், உரிமைகள் பகுதியில் ''6வயது முதல் 14 வயது வரை கட்டாயக் கல்வி தர முயற்சிக்கும் என்றும்'' விதி 21-A யில் எழுதப்பட்டது.

இப்போது, 1976இல் பிரதமர் இந்திரா காந்தி, அவசரச் சட்ட ஆட்சியில், 42ஆவது திருத்தத்தைத் திணித்து, விதி 45 அடங்கிய பகுதியை, Part IV என்கிற நான் காம் பகுதியைப் பொது அதிகாரப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றிவிட்டார்.

1919 இந்திய அரசுச் சட்டப்படியும், 1935 இந்திய அரசுச் சட்டப்படியும், 1949இல் பி.ஆர். அம்பேத்கரால் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புச் சட்டப்படியும் ''கல்வி'' முற்றிலும் மாகாண (அ) மாநில அதிகாரப்பட்டியலில் இருந்ததை நீக்கிவிட்டு 1976இல் பொது அதிகாரப் பட்டியலில் சேர்த்ததால், ''கல்வி''யில் மேலதிகாரத்தை முற்றிலுமாக இந்திய மத்திய அரசு கைப்பற்றிக் கொண்டது.

1. மாநில அரசு ஒரு படிப்புத் துறையை மாநிலத்தில் அறிமுகப்படுத்துவதற்கும், 2. தலைமை ஆசிரியர் பதவிக்குத் தகுதிகாண் தேர்வு, மருத்துவப் படிப்பில் சேருவதற்குத் தகுதிகாண் தேர்வு, மருத்துவர் படிப்பில் தேறிய பின்னர் மருத்துவராகப் பதவி ஏற்றிட ஒரு தகுதித் தேர்வு என அடுக்கடுக்காகத் தகுதித் தேர்வு கள் என்பது-100க்கு 85 விழுக்காட்டுப் பேராக வுள்ள கீழ்ச்சாதி நாட்டுப்புற - ஏழை மக்களுக்குப் பின்னடைவே ஆகும்.

இவ்வளவு அவல நிலைகளையும் மாற்றிட, நாம் என்ன செய்ய வேண்டும்?

1. கல்வியாளர்களை இந்திய அளவில் ஒன்றுசேர்க்க வேண்டும். அவர்கள் மாநில வேறுபாடுகள் பாராமல், ஒரே முகமாக புதுதில்லியில் கூட ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரே குரலில் பேசச் செய்ய வேண்டும்.
2. 545 மக்களவை உறுப்பினர்களில், பாதிப் பேருக் கேனும் மாநிலப் பட்டியலுக்குக் ''கல்வி''யை மாற்ற வேண்டும் - ஏன் என்பதை, அவரவர் மொழியில் அறிக்கைகள் தந்து புரிய வைக்க வேண்டும்.
3. பன்மொழிகளில் வெளிவரும் நாள் ஏடுகளின் ஆதரவைப் பெற்றிட வேண்டும்.
4. புதுதில்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 790 பேர்களுள் 500 பேர், 4200 சட்டமன்ற உறுப்பி னர்களுள் 1,000 பேர்.
5. கல்வியாளர்கள்.
6. பன்மொழி மாணவர்கள் அடங்கிய பேரணி, மாநாடு இவற்றைத் தில்லியில் நடத்திட வேண்டும்.

இவ்வளவும் செய்தால்தான், உறுதியாகக் கல்வியை, மாநில அதிகாரப் பட்டியலுக்கு மாற்ற முடியும் என்பது என் கருத்து.


**01-10-2018** **- வே. ஆனைமுத்து**

## பகுத்தறிவாளர் சிந்தனைக்கு

*பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுப்ப வர்கள் கேள்வி மாத்திரத்திலேயே ஒன்றை நம்பிவிடக் கூடாது; எழுதி வைத்திருப்பதாலேயே ஒன்றை நம்பி விடக்கூடாது; வெகு காலமாக நடந்து வருவதாகத் தெரிவதனாலேயே ஒன்றை நம்பிவிடக்கூடாது; அநேகர் பின்பற்று வதாலேயே நம்பிவிடக்கூடாது; கடவு ளாலோ, மகாத்மாவாலோ சொல்லப் பட்டது என்பதாலேயே நம்பிவிடக் கூடாது. ஏதாவது ஒன்று நம்முடைய புத்திக்கு ஆச்சரியமாய்த் தோன்றுவ தாலேயே அதைத் தெய்வீகம் என்றோ மந்திர சக்தி என்றோ நம்பிவிடக்கூடாது. எப்படிப்பட்டதானாலும் நடுநிலைமை யிலிருந்து பகுத்தறிவுக்குத் தாராளமாய் மனம்விட்டு ஆலோசிக்கத் தயாராயிருக்க வேண்டும்.*

***(குடிஅரசு. 9.12. 28; 11:2)***

# தமிழ்காப்புப் போராளி
# அறிஞர் கி.த.பச்சையப்பன் மறைந்தார்!



தமிழ்காப்பு-தமிழ் உரிமைக்காப்பு-ஈழத் தமிழர் விடுதலை இவற்றில் முழு ஈடுபாடு கொண்டவர் புலவர் கி.த.பச்சையப்பன் அவர்கள். அவர் தம் 85ஆம் அகவை யில் 20.9.2018 வியாழன் அன்று, சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் திடுமென ஏற்பட்ட மாரடைப்புக்கு ஆளாகி மறைந்தார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவர் புதுச்சேரியில் கி. தங்கவேல் - தனம்மாள் இணையருக்கு 1935ஆம் ஆண்டு பிறந்தார்.

இளமையில், புதுச்சேரி விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றார்; ஒருநாள் முழுவதும் காவலர் கண்ணில் படாமல் மரத்தின் மீதே அமர்ந்திருந்ததை என்னிடம் நேரில் கூறினார்.

சென்னையில் வண்ணாரப்பேட்டையில் தமிழா சிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றி ஓய்வுபெற்றார். பெயரளவில் ஓய்வுபெற்ற அப்பெரு மகனார், ஓய்வு இன்றி, உறக்கமின்றி தமிழ் உரிமைக் காப்பு, தமிழர் ஈழ விடுதலை, இந்தி எதிர்ப்பு, ஆங்கில ஆதிக்க ஒழிப்பு இவற்றில் இடைவிடாமல் ஈடுபட்டார். ‘‘சிந்தனையாளன்’’ மாத இதழ், ‘‘தமிழ் ஓசை’’ நாள் இதழ், ‘‘மக்கள் தொலைக்காட்சி’’ இவற்றில் தூய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்திட உதவினார்.

ஆண்டுதோறும் ‘‘சிந்தனையாளன்’’ இதழ் சார்பில் வெளியிடப்படும் பொங்கல் மலர் செப்பமாக அமைய ஆவன செய்தார். அங்கு அத்தகைய பணியைச் செய்து கொண்டிருந்த போது, அய்ந்து ஆண்டுகளுக்கு 2008 இல், ஆண்டு போடவும் இதய அடைப்புக்கு ஆளாகி, திருவல்லிக் கேணியிலுள்ள சக்தி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். பின்பு முகப்பேரிலுள்ள ‘மெட்ராசு மெடிக்கல் மிஷன் மருத்துவமனையில்’ இதய அறுவைச் சிகிச்சை செய்துகொண்டார்.

இதயநோய் உள்ளவர்கள் இரவு நீண்டநேரம் கண்விழிக்கக் கூடாது. ஆனால் சென்னையிலிருந்து திருச்சி, மதுரை, கன்னியாகுமரி, திருவள்ளூர் அறக் கட்டளை போன்ற நீண்ட தொலைவிலுள்ள இடங்களுக் குப் பேருந்து வழியாகவே அவர் பயணம் செய்வார்.

‘‘அய்யா! பேருந்தில் இரவுப் பயணம் மேற்கொள் ளாதீர்கள்’’ என, நான் பல தடவைகள் அவரை வேண்டிக் கொண்டேன். ஆனால் கடமையை ஆற்றுவதைப் பிடிவாதமாக வருந்தி மேற்கொண்டார்.

தமிழ்க்காப்பு நிகழ்ச்சிகள், தமிழீழ விடுதலைக் கிளர்ச்சிகள், இடஒதுக்கீடு கிளர்ச்சிகள் இவற்றை யார், எவர் நடத்தினாலும் - எந்த அழைப்பையும் எதிர்பார்க் காமல், விளம்பரம் செய்தார்களா என்று கருதாமலே அங்கெல்லாம் முதல் வரிசையில் - முதல் அணியில் நின்று கடமை ஆற்றிய போராளி அவர். அந்தோ! தமிழ் காப்புப் போராளியை இழந்தோம்! வாழ்க தமிழ்காப்புப் போராளி கி.த.ப.!

கி.த. பச்சையப்பன் அவர்களின் இறுதி நிகழ்வில் பல்வேறு அமைப்புகளையும் சார்ந்த பெருந்திரளா னோர் கலந்துகொண்டனர். மா.பெ.பொ.க. சார்பில் வே. ஆனைமுத்து, வாலாசா வல்லவன், இரா. பச்ச மலை, துரை கலையரசு, கலச. இராமலிங்கம், கோவி இராமலிங்கம், சுந்தரகாந்தம், ப.வடிவேலு, சி.நடராசன், தாம்பரம் மா.சுப்பிரமணி, கிருஷ்ணமூர்த்தி, க. பொன் னப்பன், புதுதில்லி தானப்பன், ஊரப்பாக்கம் முனுசாமி, மறைமலைநகர் பழனி, சமத்துவமணி, புதுச்சேரி சீனி. தங்கராசு, கவிஞர். காவிரிநாடன், காஞ்சி அமுதன், மரு.விமுனாமூர்த்தி, கு.தொல்காப்பியன், பொதிகை செய்தித்தறை இயக்குநர் மா.அண்ணா துரை உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ஆ.முத்தமிழ்ச்செல்வன், முருகவேல், சம்மந்த சிவகுமார், குறளமிழ்தன், கா.கோதண்டன்.

**வாழ்க கி.த.பச்சையப்பன் புகழ்!**

**- வே.ஆனைமுத்து**

# தந்தை பெரியாரின் 140ஆம் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள்

## சென்னை




பெரியார் ஈ.வெ.ரா. 140ஆம் பிறந்தநாள் விழாக் கூட்டங்கள் மாநிலங்களில் நடத்திட மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியில் பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி முதல் நிகழ்வாக, சென்னை, திருவல்லிக்கேணியில் அரசு அலுவலர் ஒன்றிய அலுவலக சிவஇளங்கோ இல்லத்தில் மாலை 6.00 மணி முதல் 9.00 மணிவரை பெரியார் பிறந்த நாள் விழா நடத்தப்பட்டது.

மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் மற்றும் சிந்தனையாளன் ஆசிரியர் தோழர் வே.ஆனைமுத்து தலைமையேற்று உரை நிகழ்த்தினார். முன்பாக தோழர் இரா.பச்சமலை வரவேற்புரையாற்றினாா. மா.பெ.பொ.க. பொறுப்பாளர்கள் மற்றும் சிந்தனையாளன் ஆசிரியர் குழு உறுப்பினர்கள் தோழர்கள் க.முகிலன், முத்தமிழ்ச்செல்வன் உரையாற்றினர். மா.பெ.பொ.க. மகளிரணிச் செயலாளரும், சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் தோழர் கோவிராமலிங்கம் உரையாற்றினார். சிறப்பழைப்பாளர் திரு.சி.தனவேல், இ.ஆ.ப. (பணி நிறைவு) சிறப்புரை வழங்கினார். இறுதியில் தோழர் ப.வடிவேலுவின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## வேலூர்




தந்தை பெரியாரின் 140ஆவது பிறந்த நாள் கூட்டம் 23.9.2018 ஞாயிறு மாலை 6 மணியளவில் வேலூர், சத்துவாச்சாரியில் உள்ள சோலை அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்காக வேலூர் நகர் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. மூன்று இடங்களில் பதாகைகள் வைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சிக்கு வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர் தலைமையேற்று உரையாற்றினார். மா.பெ.பொ.க. தோழர்கள் சா. குப்பன், மு.சுவாமிநாதன், இரா.பச்சமலை, க.முகிலன், முனைவர் ஆ.முத்தமிழ்ச்செல்வன், திருச்சி பேராசிரியர் சோம. இராசேந்திரன் மற்றும் வழக்குரைஞர் ப.சந்திரசேகரன் ஆகியோர் பெரியாரின் கொள்கைகளை இன்றைய தேவைக்கு ஏற்ப முன்னெடுக்க வேண்டிய முதன்மை குறித்து விளக்கி உரையாற்றினர். நகரச் செயலாளர் மீ. டில்லிபாபு நன்றி கூறினார். வாணியம்பாடி, வாலாசாப்பேட்டை, சோளிங்கபுரம் ஆகிய ஊர்களிலிருந்து மா.பெ.பொ.க. தோழர்கள் பெரியார் பிறந்த நாள் கூட்டத்தில் பங்கேற்றனர். மற்றும் தோழமை அமைப்புகள், இயக்கங்களின் தோழர்களும் திரளாக வந்து கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் திராவிட இயக்கத்தின் முதுபெரும் தலைவரும், தி.மு.க. தலைவராகத் திகழ்ந்த வருமான கலைஞர் மு. கருணாநிதி, தன் வாழ்நாள் முழுவதும் தமிழினப் போராளியாகத் திகழ்ந்த புலவர் கி.த.பச்சையப்பன் ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

## சோளிங்கபுரம்




தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கத்தின் சார்பில் 29.9.2018 சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு வேலூர் மாவட்டம் சோளிங்கபுரம் பேருந்து நிலையம் அருகில் தந்தை பெரியாரின் 140ஆம் பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. த.ஒ.வி.இ. பொதுச் செயலாளர் நிலவழகன், வே.மதியழகன்,

செவ்வேள், செல்வா, பெருஞ்சித்திரன் ஆகியோர் உரை யாற்றினர்.

**இலண்டன்**



17.9.2018 மாலை 7 மணிமுதல் 9.30 மணி வரை அம்பேத்கர்-பெரியார் வாசகர் உறுப்பினர்களும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சி.பெரியசாமியும் தந்தை பெரியாரின் 140ஆம் பிறந்தநாளை இலண்டன் திருவள்ளுவர் பள்ளியில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடி மகிழ்ந்தனர்.



**கீழ்ப்பென்னாத்தூர்**

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்ப்பென்னாத் தூரில் 17.09.2018 அன்று தந்தை பெரியாரின் 140வது பிறந்தநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. பொ.சுப்பிரமணியன் தலைமை உரையாற்றினார். பொ.கோதண்டராமன், கோ.அண்ணாமலை, கே.ரா. முருகன், நா.செம்மொழி ஆகியோர் சிறப்புரையாற்றி னார்கள். இந்நிகழ்ச்சியில் நீலமேகம், விசுவாதன், மருத்துவர் த.வீராசாமி, பழனி மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பேருந்து நிலையம் அருகில் உங்கள் சிந்தனைக்கு தகவல் பலகையில் பெரியார் படம் வைத்து பெரி யாரின் கொள்கைச் சிறப்புகள் எழுதப்பட்டன.

கோ.அண்ணாமலை நன்றியுரையுடன் விழா இனிதே முடிந்தது.

## ஈரோடையில் நீரோடையின் அறிவுத்தேடல் கூடல் விழா

## பெரியார் பிறந்தநாள் விழா




ஈரோடையில் நீரோடை அமைப்பின் சார்பில் **“பெரியார் என்னும் பேராளுமையும் தமிழ்ச் சிந்தனை மரபின் போர்க்குரலும்!”** என்னும் பொருண்மையில் தந்தை பெரியார் அவர்களின் 140ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா அறிவுத் தேடலின் கூடல் விழாவாக தோழர் நிலவன் தலைமையில் ஒருங்கி ணைக்கப்பட்டது. 2018 செப்தம்பர் 16 காலை 10 மணிக் குப் பறை முழக்கத்துடன் தொடங்கிய இவ்விழாவில், ஈரோடு கலைத்தாய் குழுவினரின் கலைநிகழ்ச்சிகள், வையப்பட்டி முத்துச்சாமி, சமர்பா குமரன் ஆகியோரின் எழுச்சிப் பாடல்கள், கண.குறிஞ்சி உள்ளிட்ட ஆளுமை களின் உரை விளக்கம் என முற்பகல் நிகழ்வு 2.00 மணி வரை நடைபெற்றது. மாலை 3.00 மணிக்குத் தொடங்கிய பிற்பகல் அரங்கின் முதல் நிகழ்வான நாகர்கோவில் பேபி செயக்குமார் அவர்களின் “மந்திரமல்ல! தந்திரம்தான்!” எனும் மூடநம்பிக்கை எதிர்ப்பு நிகழ்வு குழுமியிருந்த சிறுவர்களையும் பெரியோர்களையும் வியப்பில் ஆழ்த் தியது. 4.00 மணிக்குத் தொடங்கிய நிறைவுக் கருத்தரங் கில் வழக்குரைஞர் அங்கயற்கன்னி, ந.செவ்வேள் (த.ஓ.வி.இ), வழக்குரைஞர் த. பானுமதி, எழுத்தாளர் வே. மதிமாறன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் தந்தை பெரியாரின் சாதனைகளை விளக்கி உரையாற்றினர். மா.பெ.பொ.க மாணவர் - இளைஞரணிச் செயலாளர் முனைவர் முத்தமிழ் “பெரியார் என்னும் பேராளுமை” என்னும் தலைப்பில் கருத்துரையாற்றினார். தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் தி. வேல்முருகன் நிறைவுரையாற்றிட கோவை ‘நிமிர்வு’ குழுவினரின் பறையிசை முழக்கத்தோடு இரவு 8.30 மணிக்கு அறிவுத் தேடலின் கூடல்விழா நிறைவுற்றது.

- முனைவர் முத்தமிழ்

# எழுவர் விடுதலை

## குறித்து என்ன செய்யப்போகிறார் ஆளுநர்?

க. முகிலன்



முருகன் சாந்தன் பேரறிவாளன் நளினி ரவிச்சந்திரன் ராபர்ட் பயஸ் ஜெயகுமார்

இராசிவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப் பட்டு 27 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, இராபர்ட் பயஸ், இரவிச்சந்திரன், செயக்குமார் ஆகிய ஏழு பேரின் விடு தலை குறித்துத் தமிழக அரசு ஆளுநருக்குப் பரிந்துரை செய்யலாம்; அதை ஆய்வு செய்து முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு உள்ளது என்று 6.9.2018 அன்று உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் ரஞ்சன் கோகோய், நவீன் சின்கா, கே.எம். ஜோசப் ஆகியோரைக் கொண்ட அமர்வு தீர்ப்பளித்தது. மேலும் இந்த ஏழு பேரை விடுதலை செய்வதாக 2014ஆம் ஆண்டு செயலலிதா முதலமைச்சராக இருந்த போது தமிழக அரசு எடுத்த முடிவுக்கு எதிராக நடுவண் அரசு உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்கையும் முடித்து வைப்பதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

20 ஆண்டுகளுக்குமேல் சிறையில் இருப்பதால் விடுதலை செய்யக்கோரி பேரறிவாளன் ஆளுநருக்கு அனுப்பிய விண்ணப்பத்தின் மீது முடிவு எடுக்கப்பட வில்லை என்று கூறி பேரறிவாளன் உச்சநீதிமன்றத் தில் தொடர்ந்தவழக்கின் மீதுதான் மேலே குறிப்பிட் டுள்ள தீர்ப்பு வழங்கப்பட்டது.


இதற்குமுன், இந்த ஏழு பேரின் கருணை விண் ணப்பத்தை 11 ஆண்டுகள் கழித்து குடியரசுத் தலை வரால் தள்ளுபடி செய்யப்பட்டதைக் காரணம் காட்டி உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சதாசிவம் தலை மையிலான அமர்வு 18.2.2014 அன்று முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் மரண தண்ட னையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்தது. மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 435 இன்படி, “உரிய அரசு” (Appropriate Government) ஏழு பேரையும் விடுதலை செய்வது பற்றி முடிவு செய்யலாம் என்றும் தீர்ப்பளித்தது.

இதன் அடிப்படையில் முதலமைச்சர் செயலலிதா 19.2.2014 அன்று எழுவரையும் விடுதலை செய்ய முடிவு செய்திருப்பதாகவும், இம்முடிவுக்கு மூன்று நாள் களுக்குள் நடுவண் அரசு ஒப்புதல் வழங்க வேண்டும் என்று கோரினார். 20.2.2014 அன்று மன்மோகன் சிங் தலைமையில் இருந்த நடுவண் அரசு, உச்சநீதி மன்றத்தில், மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக் கப்பட்ட இந்த வழக்கில் ஏழு பேரை விடுதலை செய்வதற்கான அதிகாரம் தமிழக அரசுக்கு இல்லை என்று கூறி இடைக்காலத் தடை ஆணை பெற்றது. இந்த வழக்கில் உச்சநீதிமன்றம் 2015 திசம்பர் 2 அன்று வழங்கிய தீர்ப்பில், மத்தியப் புலனாய்வுத் துறையால் விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர்களை நடுவண் அரசின் ஒப்புதல் இல்லாமல் விடுதலை செய்வதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டது. தமிழக அரசு செய்த மேல்முறையீடு குறித்து விசாரித்த அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வும் 7.2.2017 அன்று அளித்த தீர்ப்பில் இதே கருத்தை உறுதி செய்தது. ஆனால் இங்கே ஒரு செய்தியைக் கருத்தில் கொள்ள வேண்டும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வு குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 435-இன்கீழ் விடுதலை செய்வது பற்றி மட்டுமே கூறியது. எனவே இச்சட்டப் பிரிவின் அடிப்படையில்தான் இவ்வழக்கு நடத்தப்பட்டது.

தொடர்ந்து தமிழக அரசு எழுவர் விடுதலை குறித்து மேல்முறையீடு செய்த வழக்கில், மூன்று மாதங்களுக் குள் இதுகுறித்து பதில் அளிக்க வேண்டும் என்று 2018 சனவரி 23 அன்று நடுவண் அரசுக்கு உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது. இதையடுத்து, நடுவண் அரசு உச்ச நீதிமன்றத்தில் “இராசிவ் கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் உள்ள ஏழுபேரை விடுதலை செய்வது ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்து வதுடன், சர்வதேச அளவில் பாதிப்புகளை உருவாக் கும்; எனவே அவர்களை விடுதலை செய்ய அனு

மதிக்க முடியாது'' என்று கூறியது. அத்துடன் குடியரசுத் தலைவர் வாயிலாகவும் இதே கருத்தை நடுவண் அரசு வெளியிடச் செய்தது.

இந்தப் பின்னணியில், 6.9.2018 அன்று உச்சநீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, அரசமைப்புச் சட்ட விதி 161-இன்கீழ் தமிழக அமைச்சரவையின் பரிந்துரையை ஏற்று ஏழு பேரை விடுதலை செய்வதற்கு ஆளுநர் ஒப்புதல் வழங்கலாம் என்று கூறியுள்ளது.



பன்வாரிலால் புரோகித்

1980இல் மாருராம் எதிர் இந்திய அரசு வழக்கிலும், 1988இல் கேகர்சிங் எதிர் இந்திய அரசு வழக்கிலும் உச்சநீதிமன்றத்தின் அரசமைப்புச் சட்ட அமர்வுகள், நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்களின் தண்டனையைக் குறைத்தல், மன்னித்தல் தொடர்பாக அரசமைப்புச் சட்ட விதி 72இன்படி குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் என்பது நடுவண் அரசின் அமைச்சரவையின் முடிவின் அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டும்; அதேபோல் விதி 161இன்படி மாநில அரசின் அமைச்சரவையின் முடிவின்படி ஆளுநர் செயல்பட வேண்டும் என்று திட்டவட்டமாகத் தீர்ப்பளித்துள்ளன. இவ்வாறு அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் ஆளுநர் எடுக்கும் நடவடிக்கை குறித்து உயர் நீதிமன்றத்திலோ, உச்சநீதிமன்றத்திலோ எவரும் வழக்குத் தொடுக்க முடியாது.

மாறாக அமைச்சரவையின் பரிந்துரையின் பேரில் அல்லாமல், ஆளுநர் தன்னிச்சையாக இதில் முடிவு எடுத்தால் அதுபற்றி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். எடுத்துக்காட்டாக, பூந்தமல்லி தடா நீதிமன்றம் 1998 சனவரியில் 26 பேருக்கு மரணதண்டனை விதித்தது. இதை எதிர்த்து 27.2.1998 அன்று உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் கே.டி. தாமஸ், டி.பி. வாத்வா, அப்துல் காதர் காத்ரி ஆகியோர் 11.5.1999 அன்று வழங்கிய தீர்ப்பில் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய நால்வருக்கு மரண தண்டனையை உறுதி செய்தும், இராபர்ட் பயஸ், செயக்குமார், இரவிச்சந்திரன் ஆகிய மூவர்க்கு வாழ்நாள் தண்டனை விதித்தும் மற்ற 19 பேரை விடுதலை செய்தும் தீர்ப்பளித்தனர்.

இந்நிலையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோர் அப்போதைய தமிழக ஆளுநர் பாத்திமா பீவியிடம் கருணை விண்ணப்பம் அளித்தனர். அவர் அதை ஏற்க மறுத்து தள்ளுபடி செய்தார். உடனடியாக நால்வர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் இதுகுறித்து வழக்குத் தொடரப்பட்டது. அப்போது வழக்குரைஞராக இருந்த கே.சந்துரு, அமைச்சரவையின் ஆலோசனை பெறாமல் தன்னிச்சையாக முடிவெடுக்கும் அதிகாரம் ஆளுநருக்கு அரசமைப்புச் சட்டப்படி இல்லை என்று வாதாடினார். அதேசமயம், அரசமைப்புச் சட்டத்தின் 181-ஆம் பிரிவின்படி ஆளுநர் பிறப்பித்த ஆணையை மறு ஆய்வு செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றத்துக்கு இல்லை என்று ஆளுநர் சார்பில் வாதிடப்பட்டது.

இந்த வழக்கில் 25.11.1999 அன்று உயர்நீதிமன்ற நிதிபதி கே. கோவிந்தராசன் அளித்த தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார் : ''அரசமைப்புச் சட்டத்தின்படி குடியரசுத் தலைவர் தலைமை நிர்வாகி ஆவார். அவரிடம் ஒன்றியத்தின் அதிகாரம் மேவி நிற்கும். அதைப்போன்று ஆளுநர் என்பவர் சம்பந்தப்பட்ட மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார். அவரிடம் அந்த மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் மேவி நிற்கும். அரசமைப்புச் சட்டத்தில் உள்ள 72ஆம் மற்றும் 161 ஆம் பிரிவுகள் முறையே குடியரசுத் தலைவர் மற்றும் அந்தந்த மாநில ஆளுநருக்கு கருணை மனுக்களில் மன்னித்தல் முதலிய அதிகாரங்களை வழங்கியுள்ளன.

குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் ஆகியோர் தமது அமைச்சரவைகளின் உதவியுடனும் ஆலோசனையுடனும் மட்டுமே செயல்படுவர். அவர்கள் நேரடியாக நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள இயலாது. தண்டனைக்கு எதிரான மேல்முறையீட்டினை முடிவு செய்யும் பணியானது நிர்வாகப் பணியாகும். எனவே மாநில அரசால் அவருக்கு வழங்கப்படும் ஆலோசனைக்கு இணங்கவே ஆளுநர் செயல்பட வேண்டும்.

ஆளுநர் ஆணை பிறப்பிப்பதற்கு முன்பாக அரசமைப்புச் சட்டத்தைப் பின்பற்றவில்லை. உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்புகளையும் பின்பற்றவில்லை. எனவே அவரது ஆணை சட்டப்படி செல்லத்தக்கதல்ல. எனவே ஆளுநரின் இந்த ஆணை நீக்கப்படுகிறது. மனுதாரர்கள் மனுவின்மீது அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று அதற்குப் பிறகு புதிய ஆணையை ஆளுநர் பிறப்பிக்கலாம்'' என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

ஆளுநராக இருந்த பாத்திமா பீவி உச்சநீதிமன்ற நீதிபதியாக இருந்தவர். எனவே இத்தீர்ப்புக்கு எதிராக

மேல் முறையீடு செய்தாலும் பயனிருக்காது என்பதை உணர்ந்து அவ்வாறு செய்யவில்லை.

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் நகலுடன் நால்வரின் மரண தண்டனைக்கு எதிராக 12 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கையெழுத்துடன் அய்ம்பதாயிரம் பேர் பேரணியாகச் சென்று அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதியிடம் அளித்தனர். தமிழக அமைச்சரவை நளினிக்கு மட்டுமே மரண தண்டனையை வாழ்நாள் தண்டனையாகக் குறைத்து பரிந்துரை செய்தது. அதன்பேரில் 2000ஆம் ஆண்டு ஆளுநர் பாத்திமா பீவி இதற்கு ஒப்புதல் வழங்கினார்.

தற்போது 6.9.2018 அன்று உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் தமிழக அரசின் அமைச்சரவை 9.9.2018 அன்று கூடி, இந்த ஏழு பேரையும் முன் விடுதலை செய்ய இந்திய அரசமைப்புச் சட்டம் 161-ஆவது பிரிவின்கீழ் ஆளுநருக்குப் பரிந்துரை செய்வது என்று தீர்மானித்தது. இத்தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப்பியது.

குற்றவியல் நடைமுறைச்சட்டம் 435இன்கீழ் நடுவண் அரசு தொடர்ந்த வழக்கை உச்சநீதிமன்றம் முடித்து வைப்பதாக அறிவித்துள்ள நிலையில் அரசமைப்புச் சட்டத்தின் 161ஆவது பிரிவின்கீழ் ஏழு பேரையும் விடுதலை செய்வதற்கு ஆளுநர் விரைவில் ஒப்புதல் அளிப்பார் என்று தமிழர்கள் அனைவரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். மேலும் குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 435 என்பது வேறு; அரசமைப்புச் சட்டப் பிரிவு 161 என்பது வேறு: இரண்டையும் தொடர்புபடுத்தல் கூடாது; 161ஆவது பிரிவு கூட்டாட்சி அரசமைப்பில் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இறையாண்மை அதிகாரமாகும்; எனவே தமிழக அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்சுவும் மற்ற சட்ட வல்லுநர்களும் கருத்துரைத்துள்ளனர்.

இதற்கிடையில் ஆளுநர் ஏழு பேரையும் விடுதலை செய்வது என்று தமிழக அமைச்சரவை எடுத்துள்ள முடிவு குறித்து ஆலோசனை கேட்டு நடுவண் அரசுக்கு ஆளுநர் மடல் எழுதியிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாயின. தொலைக்காட்சிகளில் இதுகுறித்து விவாதங்கள் நடந்தன. இந்நிலையில் 15.9.2018 அன்று ஆளுநர் மாளிகையிலிருந்து ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில், ‘‘இராசிவ் காந்தி கொலை வழக்கில் வாழ்நாள் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் விடுதலை தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகத்துடன் தொடர்பு கொண்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன. இந்த ஊகத்தின் அடிப்படையில் சில தனியார் தொலைக்காட்சிகள் விவாதங்கள் நடத்தி வருகின்றன. இந்த விவகாரம் தொடர்பாக உள்துறை அமைச்சகத்துக்கு எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை. இந்தப் பிரச்சனை (7 பேர் விடுதலை) சிக்கலான ஒன்றாகும். இதில் சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், அரசியல் சட்ட அடிப்படையிலும் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். இந்த விவகாரம் தொடர்பாக ஏராளமான ஆவணங்கள் உள்ளன. பல்வேறு நீதி மன்றத் தீர்ப்புகள் அடங்கிய ஆவணங்களை செப்டம்பர் 14 அன்றுதான் மாநில அரசு ஒப்படைத்தது. அந்த ஆவணங்கள் அனைத்தையும் கூர்ந்து ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இந்தப் பணியில் தேவைப்படும் போது ஆலோசனைகள் பெறப்படும். இந்த விடயத்தில் அரசியல் சட்ட அடிப்படையில் நியாயமான முடிவு எடுக்கப்படும்’’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுவர் விடுதலைக்கு ஆளுநர் உடனடியாக ஒப்புதல் அளிக்கமாட்டார் என்பதை ஆளுநர் அறிக்கை உணர்த்துகிறது. தேவைப்படும்போது ஆலோசனைகள் பெறப்படும் என்கிற ஆளுநரின் கூற்று புதிராக உள்ளது. இது நடுவண் அரசிடம் ஆலோசனை கேட்பதாக இருக்குமானால் எழுவர் விடுதலை மேலும் சிக்கலாகும். அந்நிலையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 161-இன்கீழ் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள இறையாண்மை அதிகாரத்தின்படி அரசின் நிர்வாகத் தலைவர் என்ற முறையில் ஆளுநர் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று தமிழகமெங்கும் தமிழர்கள் வீதிகளில் இறங்கி விண்ணதிரக் குரல் எழுப்ப வேண்டும். ஆளுநர் எத்திசையில் காய் நகர்த்துகிறார் என்பதற்கு ஏற்ப எதிர்வினையாற்ற அணியமாக இருக்க வேண்டிய வரலாற்றுக் கடமை நம்முன் இருக்கிறது.

## நவிரன் பிறந்தான்



பாவலர் வையவன்-செல்வி இணையரின் மூத்தமகன் செந்தமிழன்-ஸ்ரீரஞ்சனி இணையருக்கு 14-08-2018 அன்று ஆண் மகன் பிறந்தான். அம்மகவுக்கு நவிரன் எனப் பெயர் சூட்டியுள்ளனர். அவற்றின் மகிழ்வாகச் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.1000/- வழங்கியுள்ளனர்.

# கோத்தாரி கல்விக்குழு அன்றே சொன்னது:

# ‘கல்வி அதிகாரம் மாநிலத்திற்கே!’

- செந்தலை ந. கவுதமன்

பாடுபடுபவர் ஒருவராகவும் பயனைத் தீர்மானிப்பவர் வேறொருவராகவும் இருப்பதை எதிர்க்கும் குரல் விடுதலைப் போராட்டக் காலத்தில் கேட்டது.

ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லிக்
காயிதம் போட்டான் வெள்ளைக்காரன்

வெள்ளைக்காரன் இலண்டனிலிருந்து தீர்மானித்ததுபோல், இன்று தில்லியிலிருந்து தீர்மானிப்பேன் என்று அடம்பிடிக்கிறது நடுவணரசு.

இந்தியாவே பல தேசிய இனங்களை உள்ளடக்கிய துணைக்கண்டம். இந்திய அரசமைப்புச் சட்டமும் ‘இந்திய ஒன்றியம்’ என்றே குறிப்பிடுகிறது.

மாந்தகுலம் பலதுறைகளிலும் திரட்டி வைத்துள்ள பயனையும் பட்டறிவையும் அறியச் செய்து அடுத்த படிக்கு முன்னேற்றுவதே கல்வி! கல்வியைத் தமிழ் நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களும் பெறத் தொடங்கி இன்னும் இருநூறு ஆண்டுகூட ஆகவில்லை.

தமிழ்நாட்டின் மாநில அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த கல்வி, 1976இல் நடுவணரசால் பறிக்கப்பட்டுவிட்டது. மாநிலக் கல்வி உரிமையை 42ஆவது திருத்தச் சட்டத்தின்படி பொதுப் பட்டியலுக்குக் கொண்டு போய்விட்டது நடுவணரசு!

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் நடுவணரசுக்கு உரியவை 97 அதிகார இனங்கள்; மாநிலத்திற்கு உரியவை 66 அதிகார இனங்கள்; பொதுப் பட்டியலுக்கு உரியவை 47 அதிகார இனங்கள்! இவை போக எஞ்சியிருக்கும் அதிகாரங்கள் (Residuary Powers) அனைத்தும் நடுவணரசிற்கே வழங்கப்பட்டுள்ளன.

அரசமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் இந்த அதிகாரப் பிரிவுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் துணைக் கண்டம் 125 கோடி மக்களையும் 7 ஒன்றியப் பகுதிகளையும் (Union Territories) 29 மாநிலங்களையும் 22 தேசிய மொழிகளையும் பல்வேறு குமுக, பொருளியல் வேறுபாடுகளையும் கொண்டுள்ள இங்கு, ஒற்றை அதிகாரக்குவிப்பு என்பது, சரிவையும் சீர்குலைவையும் சமத்துவ மறுப்பையும் ஏற்படுத்தும் அபாயம் நிறைந்தது.

மாநிலத்திற்கு உரிய கல்வி அதிகாரத்தைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டுபோன கொடுமை 1976இல் நடந்தது.

பல்கலைக்கழக மானியக் குழு (UGC), அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கழகம் (AICTE), இந்திய மருத்துவக்குழு (MCI) முதலிய பலவும் அதன்பின் நடுவணரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குப் போய்விட்டன.

நடுவணரசின் அதிகாரக் குவிப்பால், ஊழலும் குளறுபடிகளும் எளிய மக்கள் புறக்கணிப்பும் தலைவிரித்தாடும் என்பதை மெய்ப்பித்தது கேத்தன் தேசாய் வழக்குச் செய்தி!

இந்திய மருத்துவக் குழுவின் தலைவராக இருந்தவர் கேத்தன் தேசாய் (மீண்டும் அதே இடத்திற்கு வரப் போகிறார்). அதிகாரம் அனைத்தும் அவரிடம் குவிக்கப்பட்டிருந்ததால் தங்கமும் பணமும் அவர் காலடியில் குவிக்கப்பட்டுக் கிடந்தன. அவரைத் தளைப்படுத்திய போதுதான் அது தெரியவந்தது. அவர் வீட்டில் பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்தின் அளவு ஒன்றரைக் கல்லெடை (டன்)! (இந்தியாவின் ஓராண்டு தங்க உற்பத்தியே இரண்டு கல்லெடை (டன்) தான்!). வீட்டில் பதுக்கப்பட்டிருந்த பணத்தின் மதிப்பு 1500 கோடி!

ஒரு துறையில் ஒருவர் நடத்திய முறைகேட்டின் அளவே இப்படி! ஒவ்வொரு துறையிலும் அதிகாரக் குவிப்பு உருவாக்கியிருக்கும் நிலை என்னவென்பதை இதிலிருந்து ஊகித்துக் கொள்ளலாம்.

இவற்றை முன்கூட்டியே எண்ணிப் பார்த்து, “மாநிலப் பட்டியலில் கல்வி இடம்பெற வேண்டும்” என, 1966 இலேயே அறிவித்துள்ளது கோத்தாரி கல்விக்குழு அறிக்கை:“பொதுப் பட்டியலில் கல்வியை இணைப்பதனால் விரும்பத்தகாத அதிகாரக்குவியல் ஏற்படும்... சுதந்தரமும் தேவைக்கேற்ப விட்டுக்கொடுக்கும் நெகிழ்வுத் தன்மையும் இல்லாமல் போய்விடும்” (Ref. Education and National Development, Report of the Education Commission (1964+1966) headed by D.S. Kothari, 1970, P.829-830).

கோத்தாரி கல்விக்குழு எச்சரித்துப் பத்தாண்டிற்குப் பின், அதற்கு எதிரான திசையில் கல்வி 1976இல் பொது அதிகாரப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கோத்தாரி கல்விக்குழு வலியுறுத்திய அதே கருத்தைத் தமிழக முன்னாள் ஆளுநர் பி.சி. அலெக்சாண்டரும் 2010ஆம் ஆண்டு வழிமொழிந்து பேசியுள்ளார். நடுவணரசு உயர் கல்வியில் தலையிடுவது குழப்பங்களை உருவாக்கும் என்று அவர் கூறியுள்ளார் :

“இப்போது தேவைப்படுவது என்னவென்றால், மாநில அரசுகள் தங்களின் சொந்தச் சட்டங்களில் உள்ள விதிகளின்படி உயர்கல்வி நிறுவனங்களை நிருவகிக்க அனுமதிக்க வேண்டும். நடுவணரசின் நிருவாகக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரும் எந்த விதியையோ சட்டத்தையோ அவர்கள் மீது திணிக் காமல் இருக்க வேண்டும்” - பி.சி. அலெக்சாண்டர் (டெக்கான் கிரானிக்கிள் 16.6.2010; தமிழில் த.க. பாலகிருட்டிணன் - விடுதலை 26.6.2010).

‘கல்வி உரிமை மாநிலங்களுக்கே’ என்பதை ‘நீட்’ போன்ற பொது நுழைவுத் தேர்வினால் பறிக்கப்பட்ட மாணவ உயிர்கள் சொல்கின்றன. கல்வித்துறை ஆய்வு அறிக்கைகளும் அதனை முன்னரே கூறி எச்சரித்து உள்ளன.

மக்கள் நலனைக் காக்கும் எவரும் மாநிலங்களின் தன்னாட்சி உரிமையைக் காக்க விரும்புவர். அதற்குத் தொடக்கமாகக் கல்வியை மாநில அதிகாரப் பட்டியலுக் குத் திரும்பக் கொண்டுவரும் முயற்சியில் சேர்ந்து ழைக்க உறுதியேற்போம்!

## புலவர் கி.த.பச்சையப்பன் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு



புலவர் கி தப நினைவேந்தல் நிகழ்வு 30.09.2018 அன்று மாலை 6 மணிக்கு புதுவண்ணை குறுக்குச் சாலை வெற்றித் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. ஐயா பழ நெடுமாறன் புலவர் கி.த.ப. படம் திறந்து வைத்துச் சிறப்புரை ஆற்றினார் .

நிகழ்வில் தோழர்கள் பெ மணியரசன்,கவிஞர் காசிஆனந்தன், சிகரம் செந்தில்நாதன் இயக்குநர் கவுதமன், புலவர் இரத்தினவேலன், ஐயா இறையெ ழிலன், ஒப்பிலா மதிவாணன், பிரின்ஸ் கஜேந்திரபாபு, தமிழநேயன், செ.கங்காதரன் டாக்டர் விமுனா மூர்த்தி காஞ்சிஅமுதன் உள்ளிட்டவர்கள் நினைவைப்பகிர புலவர் இராசா தண்டபாணி நிகழ்வை நெறிப்படுத்தினார். மதிமுக மல்லை சி இ சத்யா, நிகழ்விற்குக் கடைசியாக வருகை தந்தார். நிகழ்விற்கு உணர்வாளர்கள், உறவினர்கள் திரளாக வருகைதந்தனர். கி.த.ப. பெயர்த்திகள் வந்தவர் அனைவருக்கும் நன்றி கூறினர்.

## எழுவர் விடுதலைக்கு உண்ணாநிலைப் போராட்டம்




இராசிவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு 28 ஆண்டுகளாக சிறையில் உள்ள ஏழு தமிழர்களை உச்சநீதி மன்றத்தீர்ப்பின் அடிப்படையில் தமிழக அமைச்சரவை விடுதலை செய்ததை ஏற்று தமிழக ஆளுநர் எழுவரை விடுதலை செய்ய வேண்டுமென எழுவர் விடுதலைக்கூட்டமைப்பு காஞ்சியில் 24 9 2018 ல் ஒருநாள் உண்ணாநிலைப்போராட்டம் பெரியார் சுடர் அருகில் நடைபெற்றது.

தோழர் காஞ்சிஅமுதன் தலைமையில் நடைபெற்ற இவ்வுண்ணாநிலைப் போராட்டத்தை மதிமுக துணைப் பொதுச்செயலாளர் மல்லை சி இ சத்தியா தொடங்கி வைத்தார்.

பாசறை அ செல்வராஜ் காஞ்சி ச தீனன் மகேஷ், ஜாபர்செரிப், தாண்டமூர்த்தி, உவைஸ மீரான், இரவி பாரதி, மகேஷ், வெற்றித்தமிழன் மூத்ததோழர் சிவலிங்கம் பேராசிரியர் ச சங்கரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

விடுதலைச்சிறுதைதகள் ,தமிழக வாழ்வுரிமைக்கட்சி மதிமுக மக்கள் மன்றம், திராவிடர்கழகம், எஸ்டிபிஜ, தமுமுக, தன்னாட்சித் தமிழகம், பாலாற்றுப் பாதுகாப்புக் கூட்டியக்கம், ஐந்திணை கலை பண்பாட்டு இணையம், பாலாறு விவசாயிகள் இயக்கம் உள்ளிட்ட அமைப்பகளின் தோழர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பாவலர் பூங்குன்றன்,காஞ்சி உலக ஒளி எழுச்சி இசை முழக்கம் செய்தனர். மார்ச்சியப் பெரியாரியப் பொதுவுடைக்கட்சி சார்பில் மா.செ.சி. நடராசன் உரையாற்ற சம்மந்தம் சிவக்குமார்,கோபால கிருட்டிணன், மு.செயப்பிரகாசு ஆகியோர் கலந்து கொண்டஉண்ணாநிலைப்போராட்டத்தை எலுமிச்சைச் சாறு கொடுத்து ஆழி செந்தில்நாதன் முடித்து வைத்தார்.

நிகழ்வு பொதுமக்களின் கவனத்தைக் கவர்வதாக அமைந்தது.

# தொல்குடி திராவிடர்களும் - வந்தேறி ஆரியர்களும்

- குட்டுவன்

இந்தியாவின் வரலாறு ஆதிக்கச் சமூகத்தினரால் மறைக்கப்பட்டு, திரிக்கப்பட்டு வந்தது. ஆய்வு என்ற பெயரால் பொய்யுரைகளையே முடிவுகளாக முன்னி றுத்தினார்கள். தொல்குடிகளான திராவிடர்களின் பண்பாட்டினை ஏற்றுக் கொள்ளவும் தயங்கினர். சிந்து சமவெளி நாகரிகத்தின் காலத்திற்கு முன்பே வேதகால ஆரியர்கள் இருந்தனர் என்று திரும்பத் திரும்பப் பொய்யுரைகளையே கூறி வந்தனர். இந்த ஆதிக்கச் சமூகத்தினர் மொகலாயர் காலமாக இருந்தாலும் கிழக்கிந்தியக் குழுமங்கள் ஆட்சிக் காலத்திலும் அவர் களுக்கு அடிமை வேலை செய்தனர். வெளிநாட்டி லிருந்து வரும் ஆய்வாளர்களுக்கு திராவிடமும் ஆரியமும் இந்தியாவின் இரு கண்கள் என்று கூறினர். இதை நம்பிய ஜெர்மானிய மெக்ஸ் முல்லர் ஆரிய மொழியான சமற்கிருதம்தான் அன்றைய இந்தியத் துணைக் கண்ட பகுதிகளில் கோலோச்சியது என்று குறிப்பிட்டார். ஆரிய சமாஜத்தை உருவாக்கிய தயானந்த சரசுவதி உலகம் தோன்றிய காலத்திலிருந்து தொன்மையான நாகரிகத்தை உருவாக்கியவர்கள் ஆரியர்கள் என்றும், திபெத் வழியாக இந்த நாட்டிற்கு வந்து உயர் பண்பாட்டினை அளித்தார்கள் என்றும் பொய்யுரையை அளித்தார்.

விநாயகர் சிலையை அரசியலாக்கிய பார்ப்பன பாலகங்காதர திலகர் கிறித்து பிறப்பதற்கு 8000 ஆண்டுகளுக்கு முன்பு ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர் திலகரின் கருத்துதான் உண்மையானது என்றார். ஆரியர்கள் இந்தியாவில் தோன்றியவர்கள் என்றார் சுவாமி விவேகானந்தர். மேலும் இன்றைய ஆப்கானிஸ்தான் இந்தியப் பகுதி யாகவே ஒரு காலத்தில் இருந்தது என்று எடுத்துரைத் தார். வங்கத்தில் காங்கிரசுப் புரட்சியாளரகவே தோன்றி இறுதியில் சாமியாராக பாண்டிச்சேரியில் வலம் வந்து மறைந்த அரபிந்தோ சமஸ்கிருத மொழிக்கும் திராவிட மொழிக்கும் நெருக்கமான உறவு இருந்தது என்று கூறினார். இந்தக் கருத்துகள் எல்லாம் முன்மொழியப் பட்டபோது அறிவியல் போதுமான அளவிற்கு வளர்ச்சி யடையவில்லை.

தற்போது தொல்பொருள் ஆய்வுகளின் வழியாகக் கண்டெடுக்கப்பட்ட பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மனித உடல்களை, அறிவியல் வழியாக ஆய்வு செய்யும் மரபு கடந்த 20 ஆண்டுகளாகப் புகழ்ப் பெற்று வருகிறது. மானுட இயலில் குறிப்பிடப்படுகிற வேட்டையாடிய மானுட சமூகம் பல ஆயிரம் ஆண்டு களைக் கடந்து நாகரிக சமூகமாக மாறியது என்ற உண்மைகள் இன்றைக்கு அறிவியல் வழியாக உறுதி செய்யப்படுகிறது. மருத்துவ அறிவியல் மேலோங்கி வளர்ந்து வருவதால் மரபணு (gene) எந்த இனத்தி லிருந்து எந்த இடத்திலிருந்து எந்தக் காலத்திலிருந்து புறப்பட்டது என்பதையும் துல்லியமாகக் கணக்கிடும் முறையும் வளர்ந்து விட்டது. 1915இல் தொடங்கி பல வரலாற்று ஆய்வாளர்கள்- குறிப்பாகச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த சே அய்யங்கார் இந்தியாவினுடைய பண் பாட்டிற்குத் திராவிடம் அளித்த பங்களிப்பைப் பற்றி எழுதினார். அவர் திராவிடர்கள் தனித்த இயல்போடு இப்பகுதியிலேயே பிறந்து வளர்ந்து ஒரு பெரும் நாகரிகத்தை அளித்தார்கள் என்று குறிப்பிட்டார். தொல்பொருள் சான்று, இலக்கியச் சான்று சமற்கிருத மொழியில் எழுதப்பட்ட பழமையான நூல்களில் காணப் பட்ட தரவுகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் திராவிடத் தொன்மையைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆதிச்சநல்லூர் தொல்பொருள் ஆய்வு பல வரலாற்று அறிஞர்களுக்குத் தமிழர்களின் தொன்மையையும் தனித்தன்மையையும் பற்றிய தரவுகளைத் தந்தது. அரிக்கமேடு ஆய்வுகளும் இன்றைய கேரள மாநிலப் பகுதிகளில் எடுக்கப்பட்ட தொல்பொருள் ஆய்வுகளும் அண்மையில் கீழடி ஆய்வில் கிடைத்த தரவுகளும் தமிழர்களின் நாகரிகத் தொன்மையை எடுத்தியம்பு கின்றன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் (1915) வரலாறு மற்றும் அகழ்வாராய்ச்சித் துறையின் தலைவராக இருந்த பேராசிரியர் கிருஷ்ணசாமி ஐயங்கார்- திராவிடக் கட்டடக்கலை இந்தியாவின் பண்பாட்டிற்குத் தென்னிந்தி யாவின் பங்களிப்பு போன்ற நூல்களை வழங்கியவர். இவரும் திராவிடர்களின் தனித்தன்மையைப் பற்றியும் அவர்களுடைய தனித்துவமான பண்பாடுகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். ஸ்பெயின் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்து மும்பை புனித சேவியர் கல்லூரி யில் வரலாற்றுப் பேராசிரியராக இருந்த பாதிரியார் ஹென்றி இராஸ், சிந்து சமவெளி நாகரிகத்தைப் பற்றிப் பல முன்னோடியான ஆய்வுகளை மேற்கொண்டார். சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம்தான் என்று 1922ஆம் ஆண்டிலேயே இராஸ் குறிப்பிட்டார்.

2010இல் என் நினைவு மறைவதற்கு முன் (Before Memory Fades) என்ற தன் வாழ்க்கை வரலாற்று நூலில் பாலி நாரிமன் பாதிரியார் இராஸிடம் பயின்ற மாணவர். வரலாற்றுப் பாடத்தை இராஸ் மாணவர் களுக்குப் பயிற்றுவிக்கும்போது சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகம் என்பதற்கான பல தரவுகளை எடுத்துக் காட்டுவார் என்று குறிப்பிட்டுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர் இராஸ் சிறப்புச்

சொற்பொழிவை அக்காலக்கட்டத்தில் வழங்கியுள்ளார். திராவிட நாகரிகத்தின் சிறப்புகளைப் பட்டியலிட்டுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் முதல் பேராசிரியர் கில்பர்ட் சிலேட்டர் 1915இல் பொறுப்பேற்றார். பேராசிரியர் சிலேட்டர் தமிழ் மொழியைப் பயின்றார். தமிழ் நாகரிகத்தைப் பற்றிய ஆய்வுகளையும் மேற்கொண்டார். இந்தியாவின் பண்பாட்டிற்குத் திராவிடம் அளித்த கூறுகள் (Dravidian Elements in India's Culture) என்ற நூலை எழுதி னார். இந்நூலினைப் பன்மொழிப் புலவர் க.அப்பாதுரை யார் தமிழிலும் மொழி பெயர்த்துள்ளார். இந்நூலில் ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. வேட்டையாடும் சமுதாயமாக மற்ற இனத்தவர் இருந்த காலத்தில், திராவிடர்கள் நாகரிக சமுதாயமாக வாழ்ந்தார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் திராவிட நாகரிகத்தின் தொன்மையைத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். திருக்குறளை ஆங்கி லத்தில் மொழிப் பெயர்த்த எலியட்சு திராவிடச் சான்று என்ற நூலையும் எழுதியுள்ளார்.

இவ்வாறாக திராவிடர்களின் தொன்மையையும் அவர்களது வாழ்க்கை நிலையையும் பற்றிய கருத்துகள் தொடர்ந்து இருந்த வண்ணமே உள்ளன. இக்கட்டுரை யாசிரியர் பேராசிரியர் சஞ்சீவியுடன் 1982 ஆண்டு மக்கள் சீனத்திற்குப் பயணம் செய்த போது 40க்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் சீன மொழியில் இருப்பதைப் பேராசிரியர் சஞ்சீவி அட்டவணைப்படுத்தியுள்ளார். சான்றாக, மா என்றால் குதிரை. மல்லி என்றால் மல்லிகைப்பூ என்றே சீன மொழியிலும் குறிப்பிடுகிறார்கள். 2010இல் சப்பான் பல்கலைக்கழகங்களில ஆய்வுச் சொற்பொழிவுகளை மேற்கொள்ள கட்டுரையாசிரியர் பயணம் செய்த போது பேராசிரியர் பொற்கோ சப்பானிய தமிழ் மொழிகள் தொடர்பு பற்றிய ஒரு நூலினை எனக்கு அளித்தார். அந்நூலில் சப்பான் மொழியிலும் பல தமிழ் சொற்கள் இருப்பதையும் போகிப் பொங்கல் மாட்டுப் பொங்கல் போன்ற விழாக்கள் அங்கு கொண் டாடப்படுவதையும் பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப் பற்றி அங்குள்ள பொருளாதாரப் பேராசிரி யர்களிடம் பேசிய போது அவர்களும் இக்கருத்தினை ஏற்றுக்கொண்டனர். மேலும் சப்பானியப் பேராசிரி யர்களின் வலியுறுத்திலின்படி ஒரு கண்காட்சியத்திற்குச் சென்ற போது ஏராளமான பழங்காலத் தமிழ்க் கடவுள் களின் சிலைகளையும் சிற்பங்களையும் காண முடிந்தது.

இதுபோன்ற எண்ணற்ற ஆய்வுகள் தொடர்கின்ற நிலையில், தற்போது அரியானா மாநிலத்தின் ராகிகர்கி இடத்தில் 1375 ஏக்கர் நிலப்பரப்பில் நடத்தப்பட்ட ஓர் அகழ்வாராய்ச்சியின் முடிவுகள் வெளி வந்துள்ளன. அறிவியல் தொழில்நுட்ப இயல், மருத்துவ இயல் இணைந்து அங்கு எடுக்கப்பட்ட உடல்களில் உள்ள மரபணுகள் (gene) மீண்டும் மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வு நடந்த பகுதி மொகஞ்சதாரோ நிலப்பரப்பைவிட அதிகமானதாகும். ராகிகர்கியில் கிடைத்த மனித மரபணுவின் தொன்மைப்படி மனிதர்கள் கிறித்து பிறப்பதற்கு 8000 ஆண்டுகளுக்கு முன்பே தொல்குடி யினர் இங்கு வாழ்ந்துள்ளார்கள். இந்தத் தொல்குடி யினர் நாகரிகமும் அவர்களது பண்பாடும் தென்னிந்திய திராவிட மக்களின் மரபு வழியாக வந்துள்ளது என்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ராகிகர்கியில் வாழ்ந்த மக்களின் மரபணுக்களில் ஈரான் நாட்டின் விவசாயிகளின் மர பணுக்கள் சிறிதளவு கலப்பும் உள்ளதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

தென்னிந்தியத் தொல்குடி மக்களின் மரபணுக்களுக்கும் ராகிகர்கியில் வாழ்ந்த மக்களுக்கும் ஒற்றுமைகள் இருப்பதால் சிந்து சமவெளி மக்கள் பேசியது திராவிட மொழியே என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் அவுட் லுக் ஆகஸ்ட் 2018 இதழிலும், இந்தியா டுடே செப்டம்பர் 2018 இதழிலும் விரிவாக வெளி வந்துள்ளன. இந்தக் கட்டுரைகளைப் பற்றிய உரையாடல்கள் எந்தத் தமிழ் ஒளி அச்சு ஊடகத்திலும் இடம் பெறவில்லை. இதற்கான முதன் மையான காரணம் ஏற்கெனவே வெளிவந்த ஆய்வு களை ஒப்பிடுகையில் இது உலக அளவில் ஒப்புக்கொள் ளப்பட்ட ஓர் அறிவியல் ஆய்வாகும். இந்த ஆய்வால் இதுவரை கூறப்பட்டு வந்த ஆரியர்கள் வருகை பற்றியும் அவர்கள் தொன்மையானவர்கள் என்று கூறப்பட்டதையும் வேதகால ஆரியர்கள் இருந்தார்கள் என்றும் வேதம் தொன்மையானது என்றும் கூறப்பட்ட அனைத்துக் கருத்துகளும் கண்ணாடி உடைந்தது போன்று சிதறியுள்ளன. குறிப்பாக இந்தியா டுடே இதழில் (பக்.26) இக்கட்டுரையில் முதன்மைக் கருத்துகளை அட்டவணைப்படுத்தியுள்ளார்கள்.

இது வரை, ஆரியம் உயர்ந்தது, இந்துத்துவா அதனடிப்படையில் உருவானது என்ற கருத்துகள் தகர்க்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு தென்னிந்திய அரசியலுக்குக் கிடைத்த புதிய வரவாகும். வடநாட்டில் இந்துத்துவக் கொள்கைக்குக் கிடைத்த மரண அடியாகும் என்று இக்கட்டுரை கூறுகிறது.

இந்தப் புதிய அறிவியல் ஆய்வின் வெளிப்பாடு திராவிடத்தின் தொன்மையைத் திராவிட மொழிகளின் சிறப்பைத் தனித்தன்மையைச் சான்று பகர்வதோடு திராவிட மக்கள்தான் மண்ணின் மைந்தர்கள் என்ற உண்மையை உலகிற்குப் பறை சாற்றுகிறது. இந்த உயரிய ஆய்வின் முடிவுகளைத் தமிழ் இயக்கங்களும் திராவிட இயக்கங்களும் உயர்த்திப் பிடிக்க வேண்டும். வந்தேறிகளின் வரலாற்றுப் பொய்களை முறியடிக்க வேண்டும். ஆய்வாளர்களும் ஆசிரியர்களும் களப் பணியாளர்களும் எழுத்தாளர்களும் மாணவர்களிட மும் இளைஞர்களிடமும் எடுத்துச் செல்ல வேண்டும். தமிழர்களுக்கான உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும்.

# புதிய பொருளாதாரக் கொள்கையின் வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி

**செங்கதிர்**


பிரதமர் வேட்பாளராக பா.ச.க.வால் அறிவிக்கப்பட்ட நரேந்திரமோடி 2014இல் நடைபெற்ற நாடாளுமன்றத் துக்கான பொதுத் தேர்தலின் போது, "நான் பிரதமரா னால் ஆண்டிற்கு இரண்டு கோடி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவேன்" என்று தேர்தல் பரப்புரை மேடை தோறும் முழங்கினார். ஆனால் நான்கு ஆண்டுகள் ஆட்சிக் காலத்தில் அய்ம்பதாயிரம் வேலை வாய்ப்புகளைக் கூட உருவாக்கவில்லை என்கிற உண்மை அம்பலமாகியுள்ளது.

அசீம் பிரேம்ஜி பல்கலைக்கழகத்தின் நீடித்த வேலை வாய்ப்புக்கான ஆய்வு மய்யம், "2018ஆம் ஆண்டில் இந்தியாவில் வேலை வாய்ப்பு நிலை" என்னும் தலைப் பில் அதன் ஆய்வறிக்கையை செப்டம்பர் மாதம் வெளி யிட்டுள்ளது.

அந்த ஆய்வறிக்கையில் இந்தியாவில் வேலையின்மை 5 விழுக்காடு உயர்ந்துள்ளது; உயர்கல்வி கற்ற இளைஞர் களுக்கான வேலையின்மை 16 விழுக்காடு உயர்ந் துள்ளது. என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2013-2015 காலத்தில் 70 இலட்சம் வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது.

அமைப்பு சார்ந்த உற்பத்தித் துறையில் பணியிடங் களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ள போதிலும் பணி நிரந்தரம் இல்லாமலும், குறைந்த கூலியிலும் வேலை செய்யும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. கடந்த முப்பது ஆண்டுகளில் தொழிலாளியின் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. கடந்த முப்பது ஆண்டுகளில் தொழிலாளியின் உற்பத்தித் திறன் ஆறு மடங்கு உயர்ந்துள்ளது. மேற்பார்வை செய் கின்றவர்கள், நிர்வாகம் செய்கின்றவர்களின் ஊதியம் மூன்று மடங்கு அதிகமாகி உள்ளது. ஆனால் தொழிலாளர் களின் ஊதியம் 1.5 மடங்கு மட்டுமே உயர்ந்திருக்கிறது. தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டி கொள்ளை இலாபம் ஈட்டுவதே முதலாளிய உற்பத்தி முறையின் நோக்கம் என்பது தொடர்ந்து அம்பலப்பட்டு வருகிறது.

1990களில் தாராளமயம், தனியார் மயம், உலக மயம் என்கிற கொள்கை இந்தியாவில் அரசுகளால் செயல்படுத்தப்பட்ட போது, இதனால் நாட்டின் பொரு ளாதார வளர்ச்சி வேகமாக உயரும் என்று ஆளும் வர்க்கத்தால் கூறப்பட்டது. ஆனால் இது நடைமுறைப் படுத்தப்பட்ட சில ஆண்டுகளிலேயே இது வேலை வாய்ப்பை உருவாக்காத வளர்ச்சி (Jobless Growth) என்பது அப்பட்டமாக வெளிப்பட்டது. நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு (GDP-ஜி.டி.பி.) வளர்ச்சி 3 முதல் 5 விழுக்காடாக இருந்த போது வேலை வாய்ப்பின் வளர்ச்சி 2 முதல் 2.5 விழுக்காடாக இருந்தது. ஆனால் தாராள மய புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத் தப்பட்ட பின், ஜி.டி.பி. வளர்ச்சி 6.8 முதல் 8.7 விழுக் காடாக உயர்ந்த போதிலும் வேலைவாய்ப்பின் வளர்ச்சி 0.1 முதல் 2.0 விழுக்காடு என்கிற தேய்வு நிலையில் இருக் கிறது என்பதைக் கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது.




| ஆண்டு | ஜி.டி.பி. வளர்ச்சி | வேலை வாய்ப்பு |
|---|---|---|
| 1972-1977 | 4.6 | 2.6 |
| 1977-1982 | 3.9 | 2.1 |
| 1982-1986 | 4.0 | 1.7 |
| 1986-1993 | 5.6 | 2.4 |
| 1993-1999 | 6.8 | 1.0 |
| 1999-2004 | 5.7 | 2.8 |
| 2004-2009 | 8.7 | 0.1 |
| 2009-2011 | 7.4 | 1.4 |
| 2011-2015 | 6.8 | 0.6 |

புதிய உயர் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட தாராளமய-புதிய பொருளாதாரக் கொள்கை, நிரந்தரத் தொழிலாளர்களை ஒப்பந்தத் தொழிலாளர் களாக மாற்றுவது, கூலியைக் குறைப்பது, வேலை யில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துவது ஆகிய வற்றின் மூலம் பெருமுதலாளிகளும் பெருவணிகர் களும் கொள்ளை இலாபம் ஈட்ட வழிவகுக்கிறது. எனவேதான் இந்திய நாட்டின் மொத்த செல்வத்தில் 74 விழுக்காடு மக்கள் தொகையில் ஒரு விழுக்காட்டினராக உள்ள பெருமுதலாளிகளிடம் இருக்கிறது.

இந்த நிலையை நீடிக்கச் செய்வதற்காக இந்திய அரசு தொழிலாளர் நலச் சட்டங்களை நீர்த்து போகச் செய்யும் நடவடிக்கைகளைச் சீர்திருத்தம் என்கிற பெயரால் எடுத்து வருகிறது. இதை எதிர்க்கின்ற தொழி லாளர்களை - குர்கானில் மாருதி சுசிகி தொழிலாளர் களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியிருப்பதுபோல் - ஒடுக்கி வருகிறது. ஆயினும் உழைக்கும் மக்கள் சாதி வேறுபாடுகளை மறந்து ஒரே வர்க்கமாகத் திரண்டு போராடுவதன் மூலமே முதலாளியத்தின் கொடிய சுரண்டலை ஒழிக்க முடியும்.

# இரட்டைக் கேடுகள் ஒழியட்டும்!



கொடியவர் மோடி ஆட்சியில் மக்கள்
குறைகள் களையத் துப்பில்லை!
அடிமை எடப்பாடி ஆட்சிக் கெதையும்
அதட்டிக் கேட்க வக்கில்லை!

தூய்மை இந்தியா பெயரில் எங்கும்
துடைப்பக் கட்டை தேய்கிறது!
வாய்மைத் தோழர் வரவரராவ் முதல்
வதைபடச் சட்டம் பாய்கிறது!

மாபெரும் திட்டம் பணமதிப் பிழப்பு
மசிரைக் கூடப் பிடுங்கலையே!
கோபப் படுவதாய் மோடி நடித்தும்
கோவணங் கூட அசையலையே!

கறுப்புப் பணத்தின் கதைஎன் னாச்சு
மட்டையை ரெண்டா கிழிச்சாச்சா?
வெறுப்பைக் கக்கும் மதவெறிக் கும்பல்
வேத இந்தியா படைச்சாச்சா?

எல்லா ஊரிலும் பிள்ளையார் ஊர்வலம்
இந்து வெறியை ஊட்டிடுதே!
புல்லை மேயும் பசுமாட் அரசியல்
வெட்டரி வாளைத் தீட்டிடுதே!

அமித்ஷா மோடி அணைப்பில் சேட்டு
அம்பானிக் கூட்டம் கொழுக்கிறதே!
இமைக்கவும் நேரம் இல்லாக் கொடுமையில்
ஏழையர் கூட்டம் தவிக்கிறதே!

வாய்க்கொழுப் பெடுத்த ராஜா சேகர்
வலம்வர இங்கே தடையில்லை!
பேய்அர சொழிக என்ற சோபியா
பேச்சுக் கிங்கே பல தொல்லை!

இந்துத் துவாவும் வல்லர சியமும்
இணைந்த மோடி ஒழியட்டும்!
குந்தித் தோப்புக் கரணம் போடும்
எடப்பாடி அரசோ அழியட்டும்!

– தமிழேந்தி


# வாக்குப் பதிவு எந்திரம்

- இராமியா

வாக்குப் பதிவு எந்திரம் நம்பிக்கைக்கு உரியது அல்ல என்று மிக மிக ... மிகப் பெரும்பான்மையான மக்கள் புரிந்து வைத்துக் கொண்டு உள்ளனர். தங்கள் எண்ணத்தை அவர்கள் சமூக வலைத் தளங்களில் பதியவும் செய்கின்றனர். அதை எதிர்த்து வாதிட முடியாத காவிகள் / பார்ப்பனர்கள் ஒரேயடியாக அடித்துப் பேசுகின்றனரே ஒழிய, முறையான கருத்துகளை முன் வைப்பது இல்லை. "வாக்குப் பதிவு எந்திரத்தில் தில்லு முல்லு செய்ய முடியும் என்றால் இந்த இடத்தில் காவிகளுக்கு வாக்குக் குறைந்தது ஏன்? அந்த இடத்தில் வேறு கட்சிகள் வென்றது எப்படி?" என்று பல் முளைக் காத குழந்தை கூட கைகொட்டி நகைக்கும் படியான சொத்தை வாதங்களை முன்வைக்கின்றனர். இவை போன்ற வினாக்கள் எழுந்தால் அவற்றிற்கு விடை அளிக்க வேண்டும் என்பதற்காகவே எந்திரத்தை விட்டுப் பிடித்து இருக்கலாம்; அல்லது இந்த மாதிரி முடிவுகள் தான் இப்போது தேவை என்று நினைத்து எந்திரங்களை அதற்கு ஏற்ப வடிவமைத்தும் இருக்கலாம் என்பதைப் பல் முளைக்காத பச்சைக் குழந்தையும் புரிந்து கொள்ள முடியும். இது ஒரு புறம் கிடக்கட்டும்.

மக்கள் முழு மனதுடன் எதிர்க்கும் இந்த வாக்குப் பதிவு எந்திரத்தை அதே வேகத்தில் அரசியல் கட்சிகள் எதிர்க்கவில்லை அல்லது எதிர்க்க முடியவில்லை. அரசியல் கட்சிகளில் பார்ப்பன ஆதிக்கம் உள்ள கட்சிகளே பெரும்பாலும் உள்ளன. அக்கட்சிகளை ஆட்டிப் படைக் கும் பார்ப்பனர்கள் (வெளியில் எதிர்ப்பதைப் போல் காட்டிக் கொண்டாலும்) காவிகளின் இன்றைய வளர்ச்சியைக் கண்டு உள்ளூர மகிழ்ச்சியில் திளைக் கின்றனர். அவாளுடைய ஒரே அச்சம் காவிகளின் கண் மண் தெரியாத வேகம் மக்களைப் புரட்சியின் பக்கம் துரத்தி விட்டு விடக் கூடாது என்பது தான். ஆகவே தேர் ஓடும் போது அது குறித்த திசையில் செல்வதற்காக முட்டுக் கட்டைகளைப் போடுவது போல் மிகவும் கவனமாக "எதிர்க்கிறார்கள்".

பார்ப்பனர்கள் கட்டுப்படுத்தாத அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் காவி அரசு "சோதனை" (ரெய்டு) என்ற பெயரில் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கட்டுக்குள் வைத்துக் கொண்டு இருக்கிறது. அவாள் கையில் அதிகாரம் இருந்தால் காந்தியையே கட்குடியன் என்று நினைக்க வைக்கும் அளவிற்குப் பிரச்சாரம் செய்து நம்ப வைக்கும் சாமர்த்தியம் உடையவர்கள். நமது அரசியல் கட்சித் தலைவர்களே ஊழல்வாதிகள் என்று சொல்லத் தேவையில்லை. காவிகளை ஒப்பிடும் போது இவர்கள் மிகக் குறைந்த அளவே ஊழல் செய்து



இருப்பவர்களாக இருக்கலாம். ஆனால் அதிகாரம் படைத்த காவிகள் எனும் பெரும் ஊழல்வாதிகள் சிறிய ஊழல்வாதிகள் மீது சோதனை என்னும் கணையை ஏவி வீழ்த்தி விடுகின்றனர். ஆகவே அவர்களும் மக்களின் ஒருமுகமான எதிர்ப்பைப் பெற்றுள்ள காவிகளை வெற்றி வீரர்களாக அறிவிக்கப் பயன்படுத்த எண்ணி உள்ள வாக்குப் பதிவு எந்திரங்களை எதிர்த்துப் பேச முடியாமல் முடங்கிக் கிடக்கிறார்கள். சரி! வாக்குப் பதிவு எந்திரம் ஏன் பயன்பாட்டுக்கு வந்தது? வாக்குச் சீட்டு முறையில் என்ன குறை? இதற்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. முதல் காரணம் வாக்குச் சீட்டு முறையில் சில விஷமிகள் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றித் தங்கள் விருப்பப்படி வாக்களித்து விடுகின்றனர். இரண்டாவது காரணம் வாக்குச் சீட்டு முறையில் வாக்கு எண்ணிக்கைக்கு நிறைய நேரம் தேவைப்படுகிறது. எந்திரம் என்றால் மிகக் குறுகிய நேரத்தில் வாக்கு எண்ணிக்கை முடிந்து விடும்.

ஜனநாயகத்தின் அடிப்படையைக் கணக்கில் கொண் டால் இவை இரண்டும் வலுவே இல்லாத சொத்தை வாதங்கள்.

வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுகிறார்கள் என்றால் அது அரசின் / காவல்துறையின் கையாலாகாத் தனத்தைக் காட்டுகிறது. மேலும் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல் என்பது மொத்தத்தில் ஒரு விழுக்காட்டிற் கும் குறைவாகத்தான் நிகழ்கிறது. இந்த ஒரு விழுக்காடு வாக்குக் கொள்ளையைத் தடுக்க நூறு விழுக்காடு வாக்குக் கொள்ளையை அனுமதிக்க வேண்டுமா? வாக்கு எண்ணிக்கையை விரைவாக நடத்தி முடிப்ப தால் என்ன பெரிய நன்மை ஏற்பட்டு விடும்? தேர்தல் முடிந்த உடனேயே வாக்கு எண்ணிக்கையைத்

தொடங்காமல் இரண்டு, மூன்று அல்லது நான்கு நாட்கள் கழித்துத் தொடங்குகிறார்கள். இந்தக் கால தாமதத்துடன் கூடுதலாக ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் தாமதம் ஆவதில் என்ன கேடு வந்து விடும்?

வாக்கு எண்ணிக்கையில் தவறு என்றால் வாக்குச் சீட்டு முறையில் சரி பார்க்க முடியும். எந்திர முறையில் அது முடியாதே? வாக்குப் பதிவு எந்திர முறையில் சில நன்மைகள் உண்டு என்று பார்த்தால், அது ஜனநாயகத்தின் அடிப்படையையே எரித்துச் சாம்பல் ஆக்கி விடுகிறதே? ஒரு குடிமகன் யாருக்கு வாக்களித்தாரோ அவருக்குத் தான் வாக்கு விழுந்து இருக்கிறது என்ற உறுதியைத் தர முடியாத இந்த எந்திர முறை தேவையா? தேர்தல் முடிவுகள் மக்களின் எண்ணத்திற்கு நேர் எதிராக இருந்தால் உண்மையைச் சரி பார்க்க முடியாத இந்த எந்திர முறை தேவையா?



அறிவியலிலும் தொழில் நுட்பத்திலும் உச்ச நிலையில் உள்ள நாடுகளே கூட, இந்த எந்திர முறை வேண்டாம் என்று கூறிவிட்டு வாக்குச் சீட்டு முறையையே பின்பற்றுவதில் இருந்தே-எந்திர முறை நம்பகத்தன்மை இல்லாதது என்று புரிந்து கொள்ளலாமே?

இந்த வாக்குப் பதிவு எந்திரம் இந்தியாவில் 1980ஆம் ஆண்டில் எம்.பி.ஹனீபா என்பவர் வடிவமைத்தார். இது 1982ஆம் ஆண்டில் கேரளாவில் வடக்குப் பரவூர் என்ற சட்டமன்றத் தொகுதியில் சில வாக்குச் சாவடிகளில் பயன்படுத்தப்பட்டது. பின் 1999ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் இருந்து வாக்குப் பதிவு எந்திரங்களே பயன்படுத்தப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இம்முறை நம்பகத்தன்மை இல்லாதது என்று அன்று முதலே பலர் குரல் கொடுத்துக் கொண்டே இருந்தனர். அவர்களில் ஒருவர் இன்று பா.ஜ.க.வில் முக்கியமானவராக உள்ள சுப்பிரமணியன் சுவாமி ஆவார். அவர் 3.9.2009 அன்று இந்தியத் தேர்தல் ஆணைய அலுவலகத்திற்கு ஒரு மென்பெருள் பொறியாளரை அழைத்துச் சென்று வாக்குப் பதிவு எந்திரத்தில் தில்லுமுல்லு செய்ய முடியும் என்று நிறுவி இருக்கிறார். ஆனால் வாக்குப் பதிவு எந்திரத்தை உற்பத்தி செய்யும் இந்திய அரசின் மின்னணுக் கழகம் அக்கூட்டத்தைத் தடாலடியாக ரத்து செய்துவிட்டது. அதன் பின் இந்திய அரசு அந்த மென்பொருள் பொறியாளரைக் கைது செய்து, பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டது. ஆனால் அப்பொழுதெல்லாம் வாக்குப் பதிவு எந்திரத்திற்கு எதிர்ப்பு உயர் மட்டங்களில் மட்டுமே இருந்தது. இன்று போல் அடித்தள மக்கள் வரையிலும் பரவவில்லை. ஏன்?

வாக்குப் பதிவு எந்திரத்தில் தில்லு முல்லு செய்ய முடியும் என்று நிறுவப்பட்டுவிட்டது. அன்று அதிகாரத்தில் இருந்தவர்கள் தில்லு முல்லு செய்து இருக்கமாட்டார்கள் என்றெல்லாம் சத்தியம் செய்ய முடியாது தான். என்றாலும் மிகப் பெரும் அளவில் செய்யவில்லை என்று கூறலாம்; ஒரு வேளை செய்யாமலும் இருந்திருக்கலாம். காவிகள் ஆட்சியைப் பிடித்த பிறகு அரசு அதிகாரங்களை மிகப் பெரும் அளவில் தவறாகவும், பழிவாங்கும் நோக்கில் மிகத் தீவிரமாகவும் பயன்படுத்துவதைப் பார்க்கும் போது தான் இதே அணுகு முறையை வாக்குப் பதிவு எந்திரத்திலும் பின்பற்றுவார்கள் என மக்கள் அஞ்சுகின்றனர். மக்களின் அச்சத்தை உறுதி செய்வது போல உத்தரப் பிரதேசத்தில் முஸ்லீம்கள் நிறைந்து உள்ள பகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்று உள்ளது. மற்ற பழிவாங்கும் நடவடிக்கைகளாவது ஆட்சி மாறினால் சமநீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கும். ஆனால் எந்திரத்தில் தில்லு முல்லு செய்து காவிகள் மீண்டும் ஆட்சியைப் பிடித்து விட்டால் .... ? அதன் பின் தேர்தலே இராது என்பதை விட தேர்தலே அவசியம் இல்லை என்ற நிலைக்குச் சென்று விடும். அப்புறம் இன்று மறைமுகமாக ஆட்சி செய்து கொண்டு இருக்கும் வர்ணாசிரம அதர்மம் வெளிப்படையாகவே ஆட்சி செய்யத் தொடங்கி விடும்.

ஆகவே வாக்குப் பதிவு எந்திர முறைக்கு எதிராகப் போராடி வெற்றி பெற்றே தீர வேண்டியது அனைத்து அரசியல் கட்சிகளின் தவிர்க்க முடியாத கடமை ஆகும். இதை அடக்கி ஒடுக்கக் காவி அரசு அனைத்து வழிகளிலும் முயலவே செய்யும். ஆகவே காவிகளால் சோதனை (ரெய்டு) ஆயுதத்தை எய்ய முடியாதவர்களையே முன்னிலைப்படுத்துங்கள். இதில் தயக்கம் காட்டினால் முதலுக்கே மோசம் போகும் நிலை ஏற்பட்டு விடும். நீங்கள் கெடுவது மட்டும் அல்லாமல் அனைத்து மக்களையும் கொடுங்கோன்மைக்கு இரையாக்கிய குற்றமும் உங்களைச் சார்ந்து விடும்.

கட்டுரைத் தொடர்-62

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

சென்ற இதழ் தொடர்ச்சி...

- வாலாசா வல்லவன்

### மறியலுக்கு முதல் நாள் : பெத்துநாய்க்கன் பேட்டையில் பெரியாரின் சொற்பொழிவு

**பார்ப்பனரோடு இந்திப் போட்டி பலிக்குமா?**

பார்ப்பனர்கள் சமஸ்கிருதம் படித்தவர்களின் சந்ததியார்கள். சமஸ்கிருதத்தில் ஒவ்வொரு எழுத்துக்கும் 4 சப்தங்கள் உண்டு. இந்திக்கும் அப்படியேதான். நாலு சப்தங்களுக்கேற்ப எழுத்துருவங்களும் மாறியிருக்கின்றன. ஆனால் தமிழ் மொழியில் அப்படியில்லை. சப்தத்தில் மாறுதல் இருந்தாலும் எழுத்து உருவத்தில் மாறுதல் இல்லை. தமிழ் எழுத்துக்களை உச்சரிப்பதும் வெகுசுலபம். தமிழ் எழுத்துக்களையே உச்சரித்துப் பண்பட்ட தமிழன் நாக்கால் இந்திச் சப்தத்தைச் சரிவர உச்சரிக்க முடியாது. அப்படிப்பட் ஒரு மொழியை நமது சிறுவர்களின்மீது திணித்து அவர்களைக் கொடுமைப் படுத்தலாமா? என்பதுதான் எங்கள் கேள்வி.

**தெலுங்கு ரெட்டியார் தான் ஆனால் தெலுங்கைச் சரியாகப் பேசுவாரா?**

நான் ஒன்று சொல்ல நினைக்கிறேன். அதற்காக நண்பர் ரெட்டியாரும் என்மீது கோபித்துக் கொள்ள மாட்டார் என்று கருதுகிறேன். ரெட்டியார் ஒரு தெலுங்கரானாலும் அவருக்குச் சரியாகத் தெலுங்கு பேசத் தெரியாது. நான் ஒரு கன்னடியன் என்றாலும் எனக்குச் சரியாகக் கன்னடம் பேசத் தெரியாது. ஏன்? ரெட்டியாரின் மூதாதையர் தமிழ்நாட்டில் வந்து குடியேறி சுமார் 600 ஆண்டுகள், சுமார் 10 தலைமுறைகள் ஆகியிருக்கும். அதற்கும் பல ஆண்டுகள் முந்தித் தான் எனது மூதாதையரும் தமிழ்நாட்டை அடைந்திருக்க வேண்டும். 10 தலைமுறைகளாக தமிழ்நாட்டிலேயே எங்கள் குடும்பத்தினர் வாழ நேரிட்ட காரணத்தால், எங்கள் சொந்த மொழி எங்களுக்குச் சரியாகத் தெரியாது போய்விட்டது. நான் பேசும் கன்னடமும், ரெட்டியார் பேசும் தெலுங்கும் ஒரு தமிழனுக்குத் தான் புரியுமேயல்லாது ஒரு கன்னடியனுக்கோ, ஒரு தெலுங்கனுக்கோ சரியாகப் புரியாது. காரணம் தமிழ்நாட்டி லேயே பழகித் தமிழே பேசி வந்ததுதான். தமிழ் திரிந்த தெலுங்கே, பழக்கத்தால் ரெட்டியாருக்கு மறந்து போய்விட்டதென்றால், சரிவரக் கற்க, சரிவரப் பேச முடியாது போய்விட்டது என்றால், தமிழ் மாணவர்களால் இந்தியை எப்படிப் படிக்க முடியும் என்று நண்பர் ரெட்டியார் சிந்திக்க வேண்டாமா?

இப்படிப்பட்ட தமிழ் மாணவர்களால் எப்படி வடமொழியிலேயே ஊறிய இரத்தம் பாய்ந்து கொண்டிருக்கும் பார்ப்பனச் சிறுவர்களோடு போட்டிபோட முடியும்?



இதைத்தான் நான் ரெட்டியாரிடம் எடுத்துச் சொன்னேன். இதையெல்லாம் கேட்டுக் கொண்டு கடைசியாக ரெட்டியார் கூறினார். (ரெட்டியார் கூறினார் என்றால் சர்க்கார் கூறியது என்று தான் அர்த்தம் செய்துகொள்ள வேண்டும்). ‘‘நாம் ஹிந்துஸ்தான் யூனியனில் இருக்கிறோம். ஆதலால் ஹிந்துஸ்தான் யூனியன் பாஷையாகிய ஹிந்தியை படித்துத்தான் ஆகவேண்டும்; கண்டிப்பாகப் படித்துத்தான் தீரவேண்டும்’’ என்று. இதற்குத்தான் ‘‘கட்டாயமில்லை’’ என்று அர்த்தமா என்று கேட்டுவிட்டு, ஹிந்தியை எக்காரணம் கொண்டும் நம்மால் ஏற்கமுடியாது என்று கூறிவிட்டேன்.

எனவே ஹிந்தி நுழைப்பை எதிர்த்துத்தான் ஆக வேண்டும். அவர்கள் ஹிந்தியைக் கைவிடுமாறு செய்யப்படும் வரைக்கும், அந்த அளவுக்கு நமது போராட்டத்தை நடத்தித்தான் ஆகவேண்டும்.

**ஆச்சாரியாரின் நேர் தம்பி!**

இன்று ஹிந்தி எதிர்ப்புப் பற்றிச் சர்க்கார் அறிக்கை ஒன்று வெளிவந்துள்ளது. அதைக் கூட்டத்திற்கு வரும் போதுதான் பார்க்க நேரிட்டது. அவ்வறிக்கையில் ரெட்டியார் கூறுகிறார் : ‘‘மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பொதுஜன சர்க்கார், பொதுநலனை முன்னிட்டு ஏதாவதொன்றைக் கட்டாயமாக்கினாலும் அதை ஆக்ஷேபிக்கக் கூடாதென்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்’’ என்று, ராஜகோபாலாச்சாரியார்கூட முன்பு இதையே தான் கூறினார். இவர் அவரது நேர் தம்பி. அதனால் தான் பழைய ரிக்கார்டைப் பார்த்து அப்படியே காப்பியடித்திருக்கிறார். ‘‘மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பொதுஜன சர்க்கார்’’ என்றால், அச்சர்கார் பொது மக்கள் விருப்பப்படி நடக்க வேண்டுமா, அல்லது பொது மக்கள் விருப்பத்திற்கு நேர்மாறாக நடக்க வேண்டுமா? ஓட்டுக் கொடுக்கும் வரைதான் இவர்கள் பொது மக்கள் என்று கருதப்படுவார்களா? அல்லது ஓட்டுக்கொடுத்து விட்டதும் இவர்கள் இறந்துபோய்விட்டார்கள் என்று ரெட்டியார் நினைத்துக் கொண்டிருக்கிறாரா?

**அறிவா? ஆணவமா?**

‘‘நாம் இவர்களுக்கு ஓட்டுக் கொடுத்தால் இவர்கள் நம் விருப்பத்தை ஈடேற்றி வைப்பார்கள்’’ என்று

தானே ஓட்டுக் கொடுத்தவர்கள் நினைத்திருப்பார்கள். அவர்களுடைய விருப்பப்படி நடப்பதுதானே ஓட்டுப் பெற்றவர்களுக்கு ஒழுங்கும், கடமையும், அறிவுடைமையுமாகும். மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பொது ஜன சர்க்கார் என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளும் ரெட்டியார் சர்க்கார், பொது மக்கள் விருப்பத்திற்கு மாறாக இந்தியைத் திணித்து விட்டு, ''பொது நலனை முன்னிட்டு ஏதாவதொன்றைச் சர்க்கார் கட்டாயமாக்கினால் அதை ஆக்ஷேபிக்கக்கூடாது'' என்று கூறுகிறதென்றால் அது அறிவுள்ள சர்க்காரா? ஆணவம் பிடித்த சர்க்காரா? மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் இம்மந்திரிமார்களின் யோக்கியதை இன்றுதான் எனக்குப் புரிந்தது. பொறுப்பு வாய்ந்த சர்க்காராம்! பொது மக்கள் சர்க்காராம்! என்றாலும் மக்கள் விருப்பத்துக்கு விரோதமாக ஏதாவதொன்றைக் கட்டாயமாக்கினால் அதை ஆக்ஷேபிக்கக் கூடாதாம். என்னே அநியாயம்!

ரெட்டியார் மேலும் குறிப்பிடுகிறார், ''தென்னிந்தியா இந்திய யூனியனில் ஒரு பகுதியே ஆகும்'' என்று, தென்னிந்தியாவை இந்திய யூனியனில் பிணைத்தது காங்கிரஸ்காரராகிய நீங்களா அல்லது திராவிடப் பொது மக்களா? ''ஹிந்துஸ்தானி இந்திய யூனியனின் பொதுப் பாஷையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது'' என்று மேலும் கூறுகிறார். அங்கீகாரம் செய்தவர்கள் யார்? காங்கிரஸ்காரர்கள்தானே. காங்கிரஸ்காரர்கள் அங்கீகரித்துவிட்டார்கள் என்றால், நாட்டு மக்கள் எல்லோருமே அங்கீகரித்து விட்டார்கள் என்று அர்த்தமா? அல்லது அதிகார மமதை இப்படி அறிக்கைவிடச் செய்கிறதா?

**வெள்ளையனையும் மிஞ்சிவிட்டார்கள்**

''இந்தியாவின் பொதுப்பாஷையாகிய ஹிந்துஸ்தானியை ஒரு குறைந்தபட்ச அளவுக்கேனும் கற்றுக் கொண்டிராவிடில் யூனியன் சர்க்காரில் தென்னிந்திய மக்கள் தங்களுக்கு நியாயமாக உரித்தான பங்கைப் பெற முடியாமற் போய்விடும்'' என்று குறிப்பிட்டுள்ளார். வெள்ளையன்கூட இப்படிக் கூறவில்லையே, இங்கிலீஷ் கற்றாலொழிய நமக்கு நியாயமான உரிமை கிடைக்காதென்று. இஷ்டப்பட்டவர்களைத்தானே ஆங்கிலம் படிக்கச் செய்தான். அவனையும் மிஞ்சிவிட்டார்களே இந்தச் சுதந்தரவாதிகள். அதுவும் ஒரு திராவிட மந்திரி இப்படிக் கூறுகிறாரே. இந்தி தெரியாததால் நாளை நமது பேர் ஓட்டர் லிஸ்டிலிருந்துகூட எடுபட்டு விடும் போல் இருக்கிறதே.

**நாணயமும் தியாகமா?**

இந்தி படிக்கப்பட வேண்டிய அவசியத்தை இவ்வளவு வற்புறுத்திக் கூறிவிட்டு அடுத்தாற்போற் கூறுகிறார், ''ஒரு மாணவர் தம் பெற்றோர்கள் விருப்பத்திற்கு எதிராகவோ அல்லது தம் விருப்பத்திற்கெதிராகவோ இந்துஸ்தானியைப் படித்துத்தான் தீரவேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படவில்லை'' என்று, இது முன்னுக்குப் பின் முரணாக இல்லையா? இந்தி இந்நாட்டுப் பொது மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்று முதலில் கூறியுள்ள அமைச்சர், பிறகு கட்டாயமில்லை என்று கூறி மக்களை ஏமாற்றுவதற்காகத் தம் நாணயத்தைக் கூட கொஞ்சம் தியாகஞ் செய்கிறார்.

இன்னும் ஏதேதோ கூறிவிட்டு கடைசியாக ''மறியல் செய்யும் இடங்களில் கூட்டம் கூடாமல் மறியல் செய்பவர்களைத் தனியே விட்டுவிடுமாறு பொதுமக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மறியல் செய்பவர்களுக்கு அநுதாபிகளும், அவர்களுக்கு விரோதமாக இருப்பவர்களும் மறியல் செய்பவர்களுடன் கூடி நிற்பது அனுமதிக்கப்படமாட்டாது'' என்று. இதைக் கூறியதற்காக கனம் முதல் மந்திரியார் ரெட்டியார் அவர்களை மனமார வாழ்த்துகிறேன். நீங்களும் வாழ்த்துக் கூறுங்கள்! ராமசாமி ரெட்டியார் வாழ்க என்று வாழ்த்தொலி செய்யுங்கள்! (வாழ்த்தொலி அவ்விதமே செய்யப்பட்டது).

மேலும் கூறுகிறார், ''மாணவர்களுக்கு எவ்விதத் தடை செய்வதையும் அனுமதிக்க முடியாது. அத்துமீறி நடப்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்'' என்று. நாளை போராட்டம் துவங்குகிறது. சர்க்காரும் தம் இஷ்டம் போல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளட்டும். நீங்கள் மட்டும் ரெட்டியார் அறிக்கைப்படி, சர்க்கார் அறிக்கைப்படி அமைதியாக நடந்து கொள்ளுங்கள். வெற்றி நமக்கு நிச்சயம் கிடைக்கும் என்று கூறி முடிக்க, அடுத்து தோழர் அண்ணாத்துரை அவர்களும், தோழர் சி.டி.டி. அரசு அவர்களும் பேசிய பிறகு மறுபடியும் பெரியார் அவர்கள் ஹைதராபாத் நிலையைக் குறித்தும் நமது போராட்டத்தைக் குறித்தும் பேசியதாவது:-

''இப்போது ஹைதராபாத்தில் ஒரு பெரும் குழப்பம் நடைபெற்று வருகிறது. அக்குழப்பம் இந்திய சர்க்காருக்கும் நைஜாம் சர்க்காருக்கும் இடையே உள்ள அபிப்பிராய பேதத்தால் ஏற்பட்டிருக்கும் குழப்பமாக இல்லை. அங்குள்ள சில குண்டர்களால் நடத்தப்பட்டு வரும் கட்டுப்பாடான காலித்தனத்தை நைஜாம் சர்க்காரால் அடக்கமுடியவில்லை. சரியான சமயத்தில் உள்ளே புகுந்து காலித்தனத்தை அடக்காவிட்டால், அது எங்கு ஹைதராபாத்தையும் தாண்டி இந்தியாவிலும் பரவி விடுமோ என்ற கவலை ஏற்பட்டிருக்கிறது.''

**ஹைதராபாத் குண்டர் ஒழிப்பு**
**அக்கறை நமக்கில்லையா?**

அதனால் இந்திய சர்க்காருக்கும் கலகக்காரருக்கும் போராட்டம் நடைபெற இருக்கிறது. அப்போராட்டம்

மிகப்பெரிய போராட்டமாக வளர்ந்துவிடவும் கூடும். அது பெரிய யுத்தம் மாதிரியே நடக்க நேர்ந்தாலும் நேரிடலாம். அப்படிப்பட்ட நிலை நேரக்கூடுமானால் அதில் நாம் சம்மந்தப்படாமல் இருக்கமுடியாது. அப்படிப் பட்ட சமயத்தில் நமது போராட்டத்தை ஒருவேளை நிறுத்த வேண்டி ஏற்படலாம். அதற்கும் நீங்கள் தயாராக இருக்க வேண்டும். நமது சார்பும் நம்மக்கள் சார்பும் கட்டாயம் இந்திய சர்க்கார் சார்பாகத்தான் இருக்கும்.

ஹைதராபாத்தில் நடக்கும் போராட்டம் நவாப்பின் சர்க்கார் சார்பாக நடத்தப்படும் போராட்டமாக இல்லை. நவாப்பையும் சேர்த்தழிக்கக் கூடிய போராட்டமாகத் தான் அது காணப்படுகிறது. இதைத் திராவிட நாட்டு முஸ்லிம்கள் நன்கு மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். நைஜாம் எதிர்க்கப்படுகிறார். எனவே முஸ்லிம்கள் எதிர்க்கப்படுகிறார்கள் என்று கருதி யாரும் ஹைதராபாத் போராட்டத்தை இந்து முஸ்லிம் போராட்டமாக ஆக்கி இந்நாட்டில் குழப்பத்தை உண்டாக்கிவிடக்கூடாது. ஹைதராபாத்தைச் சுற்றி திராவிடர்களாகிய நாம் தான் இருக்கிறோம். தெற்கே நம் மாகாணமும் வடக்கே மைசூரும் தான் ஹைதராபாத்தைச் சுற்றி இருக்கும் பிரதேசங்களாகும். எனவே நாம் தான் ஹைதராபாத் பிரச்சனையால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆவோம். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், ஹைதராபாத் பிரச்சனையைக் காட்டி ஏதாவது விஷமத் தனத்தைக் கிளப்பிவிட்டுத்தான் நமது முயற்சியைக் கெடுக்க ஆட்சியாளர்கள் சூழ்ச்சி செய்வார்கள். அதற்கு நாம் ஆளாகிவிடக்கூடாது; நாம் ஏமாந்து போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு கூறுகிறேன்.

**இந்துஸ்தான் நைஜாம் சண்டையுமல்ல;**
**இந்தி முஸ்லிம் சண்டையுமல்ல**

மறுபடியும் சொல்லுகிறேன். இது இந்து முஸ்லிம் சண்டையல்ல. இந்துஸ்தான் சர்க்கார், நைஜாம் சார்க் கார் சண்டையுமல்ல. பின் என்ன? குண்டர்களின் காலித் தனத்தை அடக்க, அவர்கள் காலித்தனத்திலிருந்து ஹைதராபாத் மக்களை மீட்க, இந்திய சர்க்காரால் ஹைதராபாத் குண்டர்களோடு நடத்தப்படும் போராட்ட மாகத் தான் அது அமையும். நைஜாம் மன்னர் இந்திய சர்க்காருடன் ராசியாவதைத் தடுத்து நிற்பவர்கள் இக்குண்டர்கள்தான் என்று கூறப்படுகிறது. எனவே குண்டர்கள் மீது நடத்தப்படும் போராட்டத்தில் நாம் கட்டாயம் இந்திய சர்க்காரின் பக்கத்தில் தான் இருப் போம்.

ஹைதராபாத் குண்டர்கள் முஸ்லிம்கள் என்பதற் காக, நாம் இந்நாட்டு முஸ்லிம்களைச் சண்டைக்கு இழுக்கப் போவதில்லை. இந்நாட்டு முஸ்லிம்கள் யாவரும் நம்மவர்கள், திராவிடர்கள், திராவிடக் கலாச்சாரத்தில் பற்றும், அநுதாபமும், நம்பிக்கையும் உடையவர்கள். அவர்கள் எல்லோரும் நம் நண்பர்கள். நண்பர்களா கவே நாம் எப்போதும் அவர்களைக் கருதிவருவோம். எனவே இந்நாட்டு முஸ்லிம்களும் நம்முடன் சேர்ந்து இந்திய சர்க்காரை ஆதரித்துக் குண்டர்களின் ஆதிக் கத்தை ஒழிக்க முற்பட வேண்டியது அவசியம். அது தான் நன்மையுங்கூட. ஹைதராபாத் குண்டர்கள் மீது போர் இன்றோ நாளையோ துவக்கப்படலாம். நாளை இந்திப் போர், நாளை மறுநாள் ஹைதராபாத் போர் என்று நேரிட்டாலும் நேரிடலாம். இன்றைய ஹைதராபாத் குழப்பத்தால் நைஜாமே உயிரை இழக்க நேர்ந்தாலும் நேரிடலாம், அவரைக் காப்பாற்றும் பொறுப்பு இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று ஒரு முக்கியமான பிரமுகர் என்னிடம் கூறினார். சமீபத்தில் சென்னையில் மறுபடி ஏ.ஆர்.பி. துவக்கப்படவும் கூடும். அப்படி நேர்ந்தால் நமது கலாச்சாரப் போராட்டத்தை ஒரு சிறிது காலம் ஒத்தி வைக்க நேரிட்டாலும் நேரிட லாம் என்பதைத் தவிர்த்து, வேறு எந்தக் காரணத்திற் காகவும் வெற்றி கிடைக்கும் வரை போராட்டம் நிறுத்தப் பட மாட்டாது. வெற்றி கிடைக்க வேண்டுமானால் அது சீக்கிரத்திலேயே கிடைக்க வேண்டுமானால் நமக்கு அளவற்ற பொறுமை வேண்டும். கட்டுப்பாடு வேண்டும். சாந்தமும் சமாதானமுமாக நாம் நடந்து கொள்ள வேண்டும். இவைதான் நம் வெற்றிக்கு அடிப்படை.

**பொது மக்கள் அனுமதி இல்லையாம்**

மறியல் நடத்தும் தொண்டர்களுக்கு அருகாமையில் இருக்க பொதுமக்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று ரெட்டியார் கூறியிருக்கிறார்.இதற்கு இரண்டு அர்த்தம் கொடுத்துக் கொள்ளலாம். ஒன்று ''நாங்கள் தொண்டர் களை நன்றாக அடிக்கப் போகிறோம். அதில் ஏன் நீங்கள் பங்கு கொள்ளப்போகிறீர்கள்'' என்று கூறுவதாக இருக்கலாம். அல்லது ''நாங்கள் அவர்களைச் சிறை செய்யப்போகிறோம். எனவே அருகில் இருந்து ஏன் கலகத்தை விளைவிக்கப் போகிறீர்கள், எட்டி நில்லுங்கள்'' என்று கூறுவதாக இருக்கலாம். நாம் நல்ல அர்த்தத் தையே எடுத்துக் கொள்வோம். அடிக்கமாட்டார்கள் அடிபடாமலே பதவிக்கு வந்த காரணத்தால் என்றே கொள்வோம். எப்படியேயாயினும் மறியல் தொண்டர்கள் தவிர்த்து, மற்றவர்கள் அருகில் வராமல் இருப்பது தான் நல்லது.

**அடிபடவும் சிறைபுகவும் ஆசையா?**
**அவற்றைப் பார்ப்பதற்கு ஆசையா?**

யாராவது தொண்டர்களாக வர, அடிவாங்க அல்லது சிறைப்பட ஆசைப்பட்டால் எங்கள் மூலமாக வாருங்கள். அடிபடவோ, சிறைப்படவோ வசதி செய்து கொடுக்கி றோம். அவர்களுக்கும் ஆசை தீர அடிக்க வசதி செய்து கொடுக்கிறோம். வேடிக்கைப் பார்க்க வேண்டுமா னாலும் வாருங்கள். வந்தால் பேசாமல் அமைதியாக

எட்டி நின்று கொண்டு பாருங்கள். எல்லா நடவடிக் கைகளும் பேசாத படக்காட்சியேபோல் நடைபெறட்டும். ஏராளமான இராணுவத்தைத் தருவித்து வைத்துள் ளார்கள். அவர்களை ஏற்றிவர நிறைய வண்டிகளும் வைத்துக் கொண்டுள்ளார்கள். எனவே பயமில்லை. உங்கள் ஒத்துழைப்பிருந்தால் போராட்டம் மிக வெற்றி கரமாகவே நடைபெறும்.

**தனலட்சுமியாரைத் தடுத்தோம்**

நாளை போராட்டம் துவங்குகிறது. தாய்மார்களும் அவ்வப்போது போராட்டத்தில் கலந்து கொள்வார்கள். நாளையே கூடத் தோழர் வேலாயுதம் மனைவியார் தனலட்சுமி அம்மையார் அவர்கள் மறியல் செய்யப் போகிறார்கள். அம்மையார் தனித்தல்ல, மற்ற தொண்டர் களோடு தானும் தன் வயிற்றிலுள்ள 7 மாதச் சிசுவும், தன் இடுப்பில் 3 வயதுக் குழந்தையும் ஆக மற்றும் இருவருடன் அம்மையார் மறியல் செய்ய முற்பட்டுள் ளார்கள். அவருக்குச் சமாதானம் சொல்லிப் பார்த்தோம். ஒப்புக்கொள்ளாததால் அவர்களின் வேண்டுகோளுக்கு ஒப்புதல் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. எனவே நாளைப் போராட்டத்தில் அவர்கள் கலந்து கொள்வார்கள்.

**வெற்றி உங்கள் கையில்தான்**

எனவே போராட்டத்தின் வெற்றி இனி உங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்கள் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். ஊர்வலத்தில்கூட அதிகமான பேர்கள் கலந்துகொள்ளாதீர்கள். ஒருவேளை அதையே சாக்காக வைத்துக்கொண்டு இயக்கத்தைத் தடை செய்யத் துணிவார்கள் சர்க்காரார். எனவே அமைதியும் கட்டுப் பாடும் உங்களிடையே நிலவட்டும். குழந்தைகள் இதுசமயம் ஆத்திரப்பட வேண்டியதில்லை. அவசிய மான போது அழைக்கிறோம். அப்போது வாருங்கள். சென்னை முடிந்த பிறகு தான் வெளியூர்களிலிருந்து ஆட்களைத் தருவிக்க நினைக்கிறோம். அழைப்பு வரும்வரை பொறுமையோடு இருங்கள். கண்டிப் பாய்க் கலவரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள், “இந்தப் போராட்டத்தைப் போன்ற ஒரு சாத்வீகப் போராட்டத்தை நான் இதுகாறும் கண்டதே இல்லை” என்று பார்ப்பனர்கள் தமக்குள்ளாகவே பேசிக் கொள்ளும் அளவுக்குப் பொறுமையோடு நடந்து கொள்ளுங்கள், வடநாட்டான், தென்னாட்டன் என்ற பேச்சே தலைதூக்கி நிற்கட்டும். வடநாட்டானை எதிர்ப்பதிலேயே, ஒழிப்பதி லேயே உங்கள் முழுக் கவனத்தையும் முயற்சியையும் செலுத்துங்கள். உங்கள் முயற்சியை வடநாட்டான் பக்கம் திருப்பி விட்டு விட்டுப் பார்ப்பனர்களின் நம்பிக்கையைப் பெறுங்கள். அவர்களுடைய தந்திரம் உங்களுக்குப் பதிலாகக் கிடைக்கும். வடநாட்டானும் சீக்கிரம் ஒழிய வழி பிறக்கும் என்று கூறி முடித்தார்.

**(குடிஅரசு 21-10-1948)**

- **தொடரும்**

## கு.வரதராசன்
### 55ஆம் ஆண்டு மணநாள்



பெரம்பலூர் மாவட்டம், பூலாம்பாடி ஆசிரியர் கு. வரதராசன் - சின்னப்பெண் இணையரின் 55-ஆவது ஆண்டு திருமண நாளை முன்னிட்டுப் பெரி யார் கண்ட பேரறிஞர் வே.ஆனைமுத்து அவர் களை அவர்தம் இல்லத்தில் தாம்பரத்தில் சந்தித்து, குடும்பத்துடன் வாழ்த்துப் பெற்றனர்.

இவ்விணையரின் திருமணத்தை 27.5.1963 இல் சிந்தனையாளன் ஆசிரியர் வே. ஆனைமுத்து அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிரியர் கு. வரதராசன் - சின்னப்பெண் இணையர், மகள் அறிவுக்கண்ணு - பாஸ்கர் (மருமகன்); பெயர்த்தி பா. கனிமொழி, பி.இ., - செல்வக்குமார், பி.இ., பெயர்த்தி பா. கௌதமி, எம்.எஸ்சி. (ஐ.டி) - அருண்ராஜ், பி.இ., பெயரன் பா. அருண், பி.டெக்., எம்.பி.ஏ மற்றும் செல்வி ஆசுபள் ஆகியோர்.

திருமண நாள் நினைவாக ரூ.1500/- சிந்தனை யாளன் வாழ்நாள் கட்டணம் வழங்கப்பட்டது.


## பா. வசந்த கோகிலம்
### 73ஆம் பிறந்த நாள்

திருச்சி நோபிள் கு.கோவிந்தராசுலு - இலட்சுமி காந்தம் இணையருக்கு எட்டு மக்கள். அவர்களுள் மூத்தவர் பொறிஞர் கோ. பார்த்தசாரதி. அவருடைய துணைவியார் பெயர் வசந்த கோகிலம். இவர்கள் இருவரும், வே. ஆனைமுத்துவைக் கண்டு நலம் உசாவிட வேண்டி, 19.9.2018 புதனன்று முற்பகல் சென்னை அம்பத்தூர் பெரியார் - நாகம்மை அறக் கட்டளைக்கு வருகை தந்தனர்.

அப்போது, பா.வசந்த கோகிலம், தனக்கு 28.10.18 நாளன்று 73ஆம் பிறந்த நாள் வருவதை ஒட்டி, அறக்கட்டளை வளர்ச்சிக்காக ரூபா 5,000 காசோ லையாக வழங்கினார். நன்றி.

# அறநிலையத்துறை நியமித்த முதல் பார்ப்பனர் அல்லாத அர்ச்சகர்

- செங்கதிர்



தமிழக அரசின் இந்து அறநிலையத் துறையால் முதன்முறையாகப் பார்ப்பனர் அல்லாத ஒருவர் கோயில் அர்ச்சகராக அமர்த்தப்பட்டுள்ளார். பிற்படுத்தப்பட்ட வகுப்பான முக்குலத்தோர் சாதியில் கட்டடத் தொழிலாளியின் மகனாகப் பிறந்த மாரிசாமி என்பவர் மதுரை தல்லாக்குளம் அய்யப்பன் கோயில் பூசாரியாக மாதம் ரூ.2800 அடிப்படை ஊதியத்தில் பணியில் அண்மையில் அமர்த்தப்பட்டுள்ளார். 2007-2008 ஆம் ஆண்டில் அறநிலையத் துறையால் ஆறு பெரிய கோயில்களில் ஆகம முறைகளில் அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்பட்ட 206 பேரில் மாரிசாமிக்கு மட்டுமே இப்போது அர்ச்சகர் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

கடவுள் அனைவருக்கும் பொதுவானவர் என்று கூறப்படுவதால், உரிய பயிற்சி பெற்ற எந்தச் சாதியினருக்கும் கருவறையில் கடவுளுக்கு அர்ச்சனை செய்யும் உரிமை இருத்தல் வேண்டும் என்று பெரியாரின் சுயமரியாதை இயக்கம் நெடுஞ்காலமாகக் கோரி வந்தது. அம்பேத்கர் தலைமையில் 1927இல் நடந்த மகத் போராட்ட மாநாட்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் வகையில் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1970 சனவரி 26 குடியரசு நாளில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகிட சட்டம் செய்ய வேண்டும் என்று போராட்டம் நடத்தப் போவதாகப் பெரியார் அறிவித்தார். அப்போது முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி அளித்த வாக்குறுதியை ஏற்று, பெரியார் அப்போராட்டத்தைஒத்தி வைத்தார். 1970 திசம்பர் 2 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் இதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது. அச்சட்டத்தில் அர்ச்சகர் வாரிசு உரிமை ஒழிக்கப்படுவதாகவும், உரிய பயிற்சி பெற்ற அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்றும் கூறப்பட்டிருந்தது. இச்சட்டத்தை எதிர்த்துப் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். உச்சநீதிமன்றம் அர்ச்சகர் வாரிசு உரிமை ஒழிப்பை ஏற்றது; ஆனால் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆவதற்கான சட்டப் பிரிவு செல்லாது என்று கூறியது.

கேரளத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பான ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் 1993இல் அர்ச்சகராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து ஆதித்யன் என்கிற நம்பூதிரிப் பார்ப்பான் தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றத்தின் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு 2002இல் வழங்கிய தீர்ப்பில், அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவோர் குறிப்பிட்ட ஒரு சாதியைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது முதன்மையான கூறாக இருக்க முடியாது என்று கூறியது.

இத்தீர்ப்பை ஆதாரமாகக் கொண்டு கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த போது 23.5.2006 இல் இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதியும் உள்ள அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கலாம் என்று சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்பட்டது. இதன் அடிப்படையில் 206 பேருக்கு அர்ச்சகர் பயிற்சி அளிக்கப்பட்டது. இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் ரஞ்சன் கோகாய், என்.வி. இரமணா ஆகியோர் 2015 திசம்பரில் ஒரு நயவஞ்சகமான தீர்ப்பை வழங்கினர். அத்தீர்ப்பில் ஆகமப் பயிற்சி பெற்ற 206 பேரை அர்ச்சகராகப் பணியில் அமர்த்தக் கூடாது என்று கூறவில்லை. ஆனால், ஆகம முறைப்படி அர்ச்சகரை அமர்த்துவதில் சாதியோ, பிறப்போ பார்க்கக்கூடாது என்று கூறிவிட்டு, ஒரு குறிப்பிட்ட கோயிலின் ஆகம விதிப்படி எந்தப் பிரிவினர் - கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் (Denominations) காலங்காலமாக அர்ச்சகர்களாக இருந்து வருகின்றனரோ அவர்களே அர்ச்சகர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்று பார்ப்பனர்களுக்கு ஆதரவாக வஞ்சகமான தீர்ப்பை வழங்கியது.

கேரள அறநிலையத் துறை 2015 திசம்பரில் வழங்கப்பட்ட - குழப்பமான - வஞ்சகமான தீர்ப்பைப் பொருட்படுத்தாமல் 6.10.2017 அன்று 62 பேருக்கு அர்ச்சகர் பணி நியமன ஆணை வழங்கியது. இதில் பார்ப்பனர் 26 பேர், பிற்படுத்தப்பட்டவர் 30 பேர், தாழ்த்தப்பட்டவர் 6 பேர் ஆவர். மேலும் கேரள அரசில் இடஒதுக்கீட்டில் பின்பற்றப்படும் உட்சாதிகளுக்கு ஏற்ப இந்தப் பணியிடங்கள் பிரித்தளிக்கப்பட்டுள்ளன.

**எனவே தமிழ்நாட்டிலும் ஆகமப் பயிற்சி பெற்றவர்களில் மீதியுள்ள 205 பேர்களுக்கும் அறநிலையத் துறையின்கீழ் உள்ள கோயில்களில் அர்ச்சகர் பணி ஆணை வழங்கப்பட வேண்டும். பார்ப்பனரின் முற்றுரிமையாக உள்ள அர்ச்சகர் பணியைச் சனநாயகப்படுத்தாமல், சனநாயகத்தைப் பற்றிப் பேசுவது வெறும் பித்தலாட்டமே ஆகும்.**

# கண்ணியம் இலக்கணம்
# ஆ.கோ. குலோத்துங்கன் மறைந்தார்!

தமிழுலகில் புகழுடனும் தொண்டுடனும் ஐம்ப தாண்டுகட்கு மேலாக வலம் வந்தவர் அண்ணன் குலோத்துங்கன். 23.7.1943இல் பிறந்த அண்ணன் இம்மாதம் 4.9.2018 அன்று இயற்கை எய்திவிட்டார்.

ஆயிரமாண்டுகட்குமுன் தென்கிழக்கு ஆசியாவையே புலிக்கொடியால் ஆட்சிபுரிந்த சோழர்களின் பெருநகராம் கங்கைகொண்ட சோழபுரம் மண்ணில் பிறந்தவர் அண்ணன். கோவிந்தசாமி - விருத்தாம்பாள் இணையரின் மகனாக ஆயுதக்களம் என்னும் சிற்றூரில்தான் அண்ணன் பிறந்தார். அண்ணனின் அண்ணன் ஆ.கோ. இராகவன். இவர்தான் அந்த சோழமண்டலப் பகுதிகளெங்கும் பெரியாரின்-அண்ணாவின் முதல் தொண்டராகத் தலைமை தாங்கியவர். பெரியாருக்கும் அண்ணாவிற்கும் ஆ.கோ. இராகவன் வீடுதான் பாசறை இடம். பொது வாழ்வில் தமிழ்-தமிழினம்-தமிழ்நாடு என ஓர் உணர் வலையை அந்நாளில் விதைத்துப் பரப்பிய குடும்பத்தில் பிறந்த அண்ணன் குலோத்துங்கன் தன் அண்ணன் ஆ.கோ. இராகவனுக்கு ஏற்ற தம்பியாக மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கும் உரியவராகத் தன்னை ஆக்கிக் கொண்டார்.

பள்ளிக் கல்விக்குப்பின் அரியலூரில் தொழிற்கல்வி பயின்று பணியின் நிமித்தமாகச் சென்னை வந்தார் ஆ.கோ.குலோத்துங்கன். சிம்சன் நிறுவனத்தில் பணியில் சேர்ந்த குலோத்துங்கன் 1987இல் தி.மு.க.வின் தொழிற் சங்கப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றவர். தொழிலாளர்களிடையில் பெரும் புகழுக்குரியவரானார். நிருவாகம் சார்ந்து தன் குடும்பத்தை உயர்த்திக் கொள்ளாமல், தொழிலாளர் நலத்திற்காகவே தன் கடமைகளைச் செய்து வந்தார்.

1968இல் வசந்தா என்பவரைத் திருமணம் செய்து இனிய இல்லறம் நடத்திய அண்ணனுக்குப் பேரிடியாக ஓராண்டில் மகப்பேற்றின் போது அவரைப் பறிகொடுத்தது அமைந்தது. மீண்டும் ஓராண்டில் அருள்மணி என்னும் அருமைப் பெண்ணை மணந்து அண்ணன் இல்லறம் தொடர்ந்தார்.

1965இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் முதல் பல போராட்டங்களில் கலந்து கொண்ட ஆ.கோ. குலோத்துங்கன் இறுதி மூச்சுவரை தமிழுக்காகவும் தமிழ் மக்களுக்காகவும் போராடி வந்தார்.

நேர்மையாக தொழிலாளர்களுக்காக வாழ்ந்தமையால் சிம்சன் நிறுவனத்திலிருந்து வேலை பறிக்கப்பட்டு இன்னல் நிறைந்த வாழ்வில் தள்ளப்பட்டார். துன்பங்களைத் தாங்கி மனைவியையும் சோழ இளவரசி, சோழமாதேவி, குகன் ஆகிய மூன்று மக்கட்செல்வங்களையும் உலகம் பாராட்டும் பண்புகளுடன் காத்து வளர்த்து வந்தார். அனைவரையும் நன்னிலையில் வாழும்படி இயற்கை அவர்கட்குத் துணைசெய்து 1969 முதல் கண்ணியம் மாத இதழை உயிர்மூச்சாகக் கொண்டு இறுதி வரை நடத்தினார். பல நூறு பாவலர்களும் எழுத்தாளர்கள் பொதுநலப் பணியாளர்களும் கண்ணியம் வழி வளர்ந்து உலகம் அறியும்படி உயர்ந்தார்கள். அன்பும் பாசமும் கனிந்த முகமும் எளிமையும் வெள்ளுடையும் அண்ணன் குலோத்துங்கன் நூறாண்டு வாழவேண்டியவர். உலகம் அவரை வாட்டி வதைத்தது. உழைத்து, உழைத்து உடல்நலம் குன்றினார். நோய்கள் பல அவரை அரித்தன. உயர்ந்த மகனாலும் மகள்களாலும் மருமகன்களாலும் மருமகளாலும் பேரப்பிள்ளைகளும் நிரம்பியிருக்க அமைதியான முதுமை வாழ்வை அவர் கடந்துவந்த வேளையில் அவர் தமிழுலகிலிருந்து பறிக்கப்பட்டுவிட்டார்.

ஓர் அழகிய மங்கல விளக்கு எண்ணெய் தீர்ந்து படிப்படியாக அணைவதைப் போல் அவர் இறுதி மாதத்தில் படிப்படியாக உடல்நலங்குன்றி மருத்துவம் பயனின்றி அடங்கிக் கொண்டிருந்தார். ஆயினும் அவர் உயிர்துறக்கும் இறுதிப் பத்து நிமிடம் வரை பேசிக் கொண்டேயிருந்தார். தன்னைப் பார்க்க வந்த ஒவ்வொருவரிடமும் வந்தவர்களின் நலத்தையும் குடும்ப நலத்தையும் புன்முறுவலுடன் கேட்டுக் கொண்டேயிருந்தார். எல்லோரையும் வாழ்த்திக் கொண்டே படுத்திருந்தார். தான் இந்த உலகைப் பிரியப் போகின்றோமே என்ற கவலையை சிறிதும் காட்டவேயில்லை. ஞானி ஒருவர் எப்படியிருப்பார், அப்படியிருந்தார். அன்பு - அருள்-கனிவு நிறைந்த பெருமனிதராக-மாமனிதராக - அவர் வாழ்நாளில் துலங்கியதைப் போலவே இறுதி மூச்சு அடங்கும் போதும் திகழ்ந்தார்.

தனிப்பட்ட குடும்பத்திற்கு மட்டுமல்லாமல், பொது வாழ்வில் தமிழுலகில் அவருடன் பழகிய அனைவருக்கும் அவர் இழப்பு வேதனை கலந்த விம்மிதத்தை அளித்தது. அவரின் தொண்டும் அவரின் பண்பும் எப்பொழுதும் தமிழுலகில் போற்றப்படும். கண்ணியம் என்ற சொல்லிற்கு இலக்கணமே அண்ணன் குலோத்துங்கன்தான் என யாவரும் அறிவர். அத்தகு பெருமகனை இழந்த துன்பத்தில் சிந்தனையாளன் இணைந்து கொள்கிறது.

- கண்ணியத்திற்காக முனைவர் **கு. அரசேந்திரன்**

# மாநிலங்களுக்குத்தான் கல்வி உரிமை

## தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் 4ஆம் ஆண்டு மாநாடு

**தமிழ்நாட்டில் தமிழே கல்வி மொழி ! தமிழ் வழியில் படித்தோர்க்கே வேலை ! தமிழ்நாட்டிற்கே கல்வி உரிமை !** என்னும் முகமையான கோரிக்கை களுடன் தமிழ்நாட்டுக் கல்வியை இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் பயனுறும் கல்வியாக மாற்றும் நோக்கில் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கம் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.




1975-இல் நெருக்கடி நிலைக் காலத்தில் மாநில அரசின் அதிகாரப் பட்டியலில் இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. பொதுப்பட்டியல் என்பது இந்திய ஒன்றிய - மாநில அரசுகளின் ஒத்திசைவுப் பட்டியல் என்று சொல்லப்பட்டாலும் அது முழுமையாக ஒன்றிய அரசின் வல்லதிகாரம் மிக்கதாகவே உள்ளது. இதனால், கல்வியின்மீது ஒன்றிய அரசின் ஆதிக்கம் அதிகரித்திருப்பதுடன், மொழிவழித் தேசியங்களின் - மாநிலங்களின் தாய்மொழி வழிக் கல்வி புறக்கணிக் கப்பட்டு, இந்தி - சமற்கிருதத் திணிப்பு, சமூகநீதிக்கு வேட்டு வைக்கும் நுழைவுத் தேர்வுகள், அத்தகைய தேர்வுகளுக்கு ஒன்றிய அரசின் பாடத்திட்டங்கள் என எளிய குடும்பத்து மாணவர்களின் கல்விக் கனவுகள் சிதறடிக்கப்படுகின்றன. பாசக தலைமையிலான இந்திய வல்லரசு மொழிவழித் தேசியங்களை நசுக்குவதிலும், ''ஒரே நாடு (இந்தியா) - ஒரே மொழி (இந்தி) - ஒரே பண்பாடு (இந்து)'' என்று கூப்பாடு போட்டு ஒற்றை இந்தியாவைக் கட்டமைப்பதிலும் முன் எப்போதைக் காட்டிலும் விசையாகச் செயல்படுகிறது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் கல்வித்துறையிலும் பணிய மர்த்தங்களிலும் போராடிப் பெற்றுள்ள சமூக நீதி உரிமைகளையும் அழித்தொழிக்கும் வேலையையும் விசையாகச் செய்து ஒடுக்கப்பட்ட மக்களின் உயர் கல்விக்குச் சவக்குழி தோண்டிவிட்டது.

கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான - பன்முகத்தன் மையைச் சிதறடிக்கும் நோக்கிலான இத்தகைய கல்விக் கொள்கை தகர்க்கப்படவேண்டும். அதற்குக் கல்வி என்பது மாநில அரசின் உரிமையாக-அதிகாரமாக மீண்டும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வரப்படவேண்டும். சிந்தனை வளர்ச்சி மேம்பாட்டுக்கேற்ற தாய்மொழிக் கல்வி, சமூக நீதி மேம்பாட்டு அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறை, மக்கள் தொகைக் கேற்ற கட்டமைப்புடன் கூடிய கல்வி நிலையங்கள், தொலைநோக்குப் பார்வையுடனான மொழிவழி மாநிலங்களின் நிலம் சார்ந்த பாடத்திட்டங்கள் இவற்றின் மூலம் வலிமையான எதிர்காலத் தலை முறையை உருவாக்க, **மாநிலங்களுக்குத்தான் கல்வி உரிமை** என்ற கோரிக்கையை வலியுறுத்தி 2018 செப்டம்பர் 26, 27, 28 ஆகிய மூன்று நாள்களில், சென்னையில் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் நான் காம் ஆண்டு மாநாடு நடைபெற்றது.

26-9-2018 அறிவன் கிழமை மாலை 5.00 மணிக்கு எழுச்சியோடு தொடங்கிய முதல்நாள் நிகழ்விற்கு கல்வி யாளர் அரங்கிற்குத் தமிழ்நாட்டுக் கல்வி இயக்கத்தின் தலைமைப் பொறுப்பினர் முனைவர் முத்தமிழ் தலை மையேற்றார். மாநாட்டு வெளியீடான மாநிலங்களுக்குத் தான் கல்வி உரிமை எனும் நூலினைத் துணைவேந்தர் பொன்னவைக்கோ வெளியிட த.க.இ நெறியாளர்




கண.குறிஞ்சி, இலியாகத் உள்ளிட்ட தோழர்கள் பெற்றுக் கொண்டனர். மாநிலங்களுக்குத்தான் கல்வி உரிமை என்பதை வலியுறுத்தி மூன்று முகாமையான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துணை ஒருங்கிணைப்பாளர் ஒப்புரவாளன் தீர்மானங்களை முன்மொழிந்திட மேனாள் துணைவேந்தர்கள் முனைவர் வே.வசந்திதேவி, முனைவர் மா.இராசேந்திரன், மேனாள் நடுவர் து. அரி பரந்தாமன், வழக்குரைஞர் அருள்மொழி மற்றும் பேராசிரியர்கள் வீ.அரசு, சோம.இராசேந்திரன், கு.அரசேந்திரன், நல்லூர் சரவணன், இலெனின், ஹாஜாகனி, காமராசு, ஆசிரியப் பெருமக்கள் புலவர் அய்யாமோகன், மத்தேயு, மார்க்சு இளவேனில் ஆகியோர் தீர்மானங்களை வழிமொழிந்து உரையாற்றினர். ஒருங்கிணைப்பாளர் பொழிலன் நிறைவுரையாற்றினார்.

இரண்டாம் நாள் நிகழ்வு 27-9-2018 மாலை 5 மணிக்குத் தொடங்கிய இயக்கங்கள் - கட்சிகளுக்கான அமர்வுக்குத் தலைமைப் பொறுப்பினர் த.ரெ.தமிழ்மணி தலைமையேற்றார். மா.பெ.பொ.க பொதுச்செயலாளர் வே.ஆனைமுத்து நூல் வெளியிட்டு உரையாற்றினார். பொழிலன் தொடக்கவுரையாற்றிட தமிழ்த்தாசன் தீர்மானங்களை முன் மொழிந்தார். மேனாள் கேரள அமைச்சர் பேரா. அ.நீலலோகிததாசன், டி.கே.எஸ்.இளங் கோவன், (தி.மு.க.), பழ.நெடுமாறன் (உ.த.பே), தொல். திருமாவளவன் (வி.சி.க), வீரபாண்டியன் (இ.பொ.க), மல்லை சத்யா (ம.தி.மு.க.), தெகலான் பாகவி, குடந்தை அரசன், மே17 அருள்முருகன், இரஜினிகாந்த், பாவெல், இசைமொழி, சுந்தரமூர்த்தி, சுப்பு மகேசு, குழல் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் தீர்மானங் களை வழிமொழிந்து உரையாற்றிட இறுதியாகத் தி.வேல் முருகன் (த.வா.க.) நிறைவுரையாற்றினார்.

மூன்றாம் நாள் நிகழ்வு 28-9-2018 மாலை 3.00 மணிக்கு த.க.இ கொள்கைப்பரப்புநர் பிரிசில்லா தலைமையில் தொடங்கிய ஆசிரியர் - மாணவர் அரங்கில் இறை.பொற்கொடி நூல் வெளியிட, நெறியாளர் கி.குணத்தொகை தொடக்கவுரை நிகழ்த்தினார். இயக்குநர்கள் கவுதமன், மு.களஞ்சியம், இலெனின் பாரதி மற்றும் இரா. பகுத்தறிவாளன், சிலம்பரசன், சு.மூர்த்தி, பாவலர் இளம்பொறை, நீட் போராளிகள் ஆசிரியர் சபரி மாலா, அனிதாவின் அண்ணன் மணிரத்னம் உள்ளிட்ட பல்வேறு ஆசிரியப் பெருமக்களும் மாணவர்களும் உரையாற்றினர். இறுதியாக தமிழரண் மாணவர்களின் சிலம்பாட்டத்தோடு நிறைவுற்ற மாநாட்டின் அனைத்துத் தொடர்புகளையும் செய்தித் தொடர்பாளர் திருமலை தமிழரசன் ஒருங்கிணைத்தார். இம்மூன்றுநாள் மாநாடு களில் மாநிலங்களுக்குத்தான் கல்வி உரிமை எனும் குரல் ஒட்டு மொத்தத் தமிழர்களின் குரலாக ஓங்கி ஒலித்தது.

## மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மூன்று முகாமையான தீர்மானங்கள் :

1) இந்திய - பன்னாட்டுக் கல்வி நிறுவனங்களின் கல்விக் கொள்கைகள் - திட்டங்கள் எவையும் இனி இந்தியாவிலுள்ள எந்த மொழிவழித் தேசியங்களின் - மாநிலங்களின்மீதும் திணிக்கப்படுவதை தமிழர்கள், தமிழகக் கட்சிகள், இயக்கங்கள் என அனைவரும் ஒன்றிணைந்து மறுக்கிறோம். 2) கல்வி உரிமை - அதிகாரம் முழுமையும் அந்தந்த மாநிலங்களுக்குத்தான் உடையனவாக இருக்கவேண்டும் எனத் தமிழர்கள் அனைவரும் கோருகிறோம்; இதனை ஏற்றுக் கொள்வதற்கு இசைவாகத் தேர்தலில் பங்கெடுக்கும் அரசியல் கட்சிகள் தங்களின் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை களில் இக் கோரிக்கையை வெளியிட்டு வலியுறுத்திட வேண்டுகிறோம். 3) 2020-க்குப் பிறகு தமிழ்நாட்டு அரசு ஆளுகையின்கீழ் இல்லாத எந்தக் கல்வி நிறுவனங் களும் தமிழ்நாட்டில் இயங்கக்கூடாது என வலியுறுத்து வதுடன் அவற்றை எதிர்த்து அனைத்து இயக்கங்களும் கட்சிகளும் இணைந்து போராட்டங்கள் நடத்தும் எனப் பேரறிவிப்பு செய்கிறோம். மார்க்சியப் பெரியாரியப் பொது வுடைமைக் கட்சியின் சார்பில் தோழர்கள் இரா.பச்சமலை, சா.குப்பன், சி.நடராசன் ஆ.கு.ஆறுமுகம், கலசம், மு.சாமிநாதன், மதனகவி உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

– முனைவர் முத்தமிழ்

## உலகத் தமிழ்க் கழக நெறியாளர், தமிழறிஞர்

# ம.இலெ. தங்கப்பா நினைவேந்தல்




உலகத் தமிழ்க் கழகம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து மிகுந்த ஈடுபாட்டுடன் இயங்கிவரும் உலகத் தமிழ்க் கழக நெறியாளரும் தமிழறிஞருமான ம.இலெ. தங்கப்பா அவர்கள் திருவள்ளுவர் ஆண்டு 2049 விடைத் திங்கள் 17ஆம் நாள் (31-5-2018) அன்று காலமானார். அன்னாரின் நினைவேந்தல் நிகழ்வு உலகத் தமிழ்க் கழக சென்னைக் கிளை சார்பில் திருவள்ளுவர் ஆண்டு 2049 கடகம் திங்கள் 4ஆம் நாள் (20-7-2018) அன்று மாலை 6 மணியளவில் சென்னை சேப்பாக்கம் நிருபர்கள் சங்கத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு உலகத் தமிழ்க் கழகச் சென்னைக் கிளைத் துணைத்தலைவர் பேரா. மு. திருமாவளவன் அவர்கள் தலைமையேற்றார். உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் ஐயா பழ நெடுமாறன் அவர்கள் தங்கப்பா ஐயாவின் படத்தைத் திறந்து வைத்து உரை யாற்றினார். செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவன ஆய்வறிஞர் பேரா. ப. மருதநாயகம் அவர்கள் தங்கப்பா ஐயாவின் படைப்புகளைப் பற்றி அரியதோர் ஆய்வுரை நிகழ்த்தினார். தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ. மணியரசன், தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் புலவர் கி.த.பச்சையப்பன், உ.த.க. மேனாள் பொதுச் செயலாளர் தா. அன்புவாணன் வெற்றிச் செல்வி, துணைத் தலைவர் புதுவை வேலா, புதுச்சேரி மாநில உ.த.க. அமைப்பாளர் கோ. தமிழுலகன், தென்மொழி ஆசிரியர் மா. பூங்குன்றன், முனைவர் அரிமாப்பாமகன், த. விண்மீன் பாண்டியன் ஆகியோர் உலகத் தமிழ்க் கழக நெறியாளரும் தமிழறிஞருமான ம.இலெ. தங்கப்பா அவர்களைப் பற்றி நினைவேந்தல் உரையாற்றினர். சென்னை மாவட்ட உ.த.க அமைப்பாளர் பா. இறையெழிலன் தீர்மானங்கள் படித்து நிறைவேற்றினார். உலகத் தமிழ்க் கழகச் சென்னைக் கிளைச் செயலாளர் மு. அரசெழிலன் நன்றி கூற நிகழ்வு நிறைவடைந்தது.

**மறைந்த தமிழறிஞர் ம. இலெ. தங்கப்பா அவர்களுக்கு உலகத் தமிழ்க்கழகம், சென்னை கிளை, திருவள்ளுவர் ஆண்டு 2049 கடகம் 4 (20-7-2018) வெள்ளிக்கிழமை அன்று நடத்திய நினைவேந்தல் நிகழ்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:**

**தீர்மானம் : 1**

தம் வாழ்நாள் முழுவதும் தமிழ்க்காப்பும் தமிழின மீட்பும் இரு விழிகள் கொள்கையோடு வாழ்ந்து மறைந்த தமிழறிஞர் ம.இலெ. தங்கப்பா அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாருக்கு எம் நெஞ்சம் நிறைந்த இரங்கலைப் புலப்படுத்துகிறோம்.

**தீர்மானம் : 2**

2 தூத்துக்குடி தமிழ் மக்களின் வாழ்வியல் காப்புப் போராட்டத்தில் இன்னுயிர் இழந்த ஈகியர்களுக்கு எம் வீர வணக்கம். அதற்குக் காரணமான துமுக்கிச் சூட்டை வன்மை யாகக் கண்டிக்கிறோம். இந்தக்கொலைக்குக் காரணமானவர் களைக் கண்டுபிடித்து கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

**தீர்மானம் : 3**

தமிழ்மொழிப்பாடம் என்பது தமிழ் மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கான வாழ்வியல் வழிகாட்டி. எனவே மேல்நிலைப்பள்ளிகளில் மொழிப்பாடத்திற்குரிய தமிழ்த் தேர்வில் இரண்டு தாள்களிலிருந்து ஒரு தாளாக மாற்றியமைக்கும் திட்டத்தினைத் தமிழக அரசுப் பள்ளிக்கல்வித் துறை உடனே கைவிட்டு ஏற்கெனவே நடைமுறையில் இருந்த இரு தாள்கள் என்ற முறையை மாற்றக் கூடாது என்று தமிழக அரசைக் கேண்டுக்கொள்கிறோம்.

விடைத்தாள்கள் திருத்தும் பணி எளிதாகும் என்ற காரணம் ஏற்கக்கூடியதாக இல்லை. தமிழ்த் தாளைக் குறைப்பதன் மூலம் தமிழாசிரியர்கள் பணியிடங்கள் குறைய வாய்ப்புள்ளதைத் தமிழாசிரியர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

**தீர்மானம் : 4**


அரசுப் பள்ளிகளில் தமிழ் வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறைந்து வருவதாக தமிழக அரசுக் கல்வித்துறை அறிவிப்பு வருத்தமளிக்கிறது. வேலை வாய்ப்பு, தொழிற்கல்வி ஆகிய வற்றுக்கு ஆங்கில வழிக்கல்வியைத் திறந்து விட்டால் வேறு என்ன நடக்கும். இந்நிலை மாற வேண்டும். மாற்றப்பட வேண்டும். தொழிற்கல்வியைத் தமிழ்வழியில் கற்பிக்க வேண்டும். ஆகவே அரசுப் பள்ளிகளிலும் தனியார் நிறுவனங் களிலும் தமிழ்வழியில் படித்தவருக்கே வேலையில் முன்னுரிமை வழங்கவும் ஆணையிட தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

**தீர்மானம் : 5**

உலகம் முழுவதும் அவரவர் தாய்மொழி வழியிலேயே கல்வி கற்பிக்கப்படுவது நடைமுறையில் இருக்கும் போது, தமிழ்நாட்டில் மட்டும் பிற மொழிகளில் கல்வி கற்பிப்பது - நம் தாய்மொழியாகிய தமிழ் புறக்கணிக்கப்படுவது வேதனை யளிக்கிறது. ஆகவே பிறமொழிவழிக் கல்வியைத் திணிப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். உடனடியாகத் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

**தீர்மானம் : 6**

ஐயா தங்கப்பா அவர்களின் நூல்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கவேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம்.



# கண்ணியம் இதழாசிரியர் ஆ.கோ.குலோத்துங்கன் மறைந்தார்

உடையார்பாளையம் வட்டம், கங்கைகொண்ட சோழபுரம் அடுத்த உள்கோட்டையில் பிறந்தவர் ஆ.கோ. குலோத்துங்கன் அவர்கள். அவர் 2015க்குப் பிறகு உடல் நலிவு ஏற்பட்டு வீட்டிலேயே இருந்தார்.

அவர் 7.9.2018 வெள்ளி அன்று மறைந்தார் என் பதை அறிவிக்க வருந்துகிறோம்.

எனக்கு அவருடன் ஏற்பட்ட அறிமுகம் எதிர்பாராதது. 25 ஆண்டுகளுக்கு முன்னர், சென்னையில், ஒரு பொது நிகழ்ச்சியில் அவர் என்னைச் சந்தித்தார். ‘‘நான் உள்கோட்டை ஆ.கோ. இராகவனின் தம்பி. நீங்கள் அண்ணாமலை நகரிலிருந்து 1948, 1949 ஆம் ஆண்டுகளில் என் தமையனாருக்கு எழுதிய அஞ்சல் அட்டைகளை நான் படித்திருக்கிறேன்’’ என்றார். உடனே, அவருடைய கைகளைப் பற்றிக் கொண்டேன். ஏன்?

1948, 1949இல் நானும் சிதம்பரம் வட்டம், புதுப் பூலாமேடு ஏக. தாமோதரனும் இணைந்து சிதம்பரம், உடையார்பாளையம் வட்டங்களில் தி.க. கூட்டங்களுக்குச் செல்வோம். 1949இல் ஆ.கோ. இராகவன் எங்களை அழைத்திருந்தார். அவர் எவரிடமும் சிரித்துக் கொண்டே உரையாடுவார். அவர் எங்கள் ஒவ்வொருவரையும் ‘‘அண்ணா!’’ என்று அழைப்பார். அவரை, நாங்கள் ‘‘அண்ணா!’’ என்று அழைப்போம். அவ்வளவுக்கு இருதரப்பாரும் அன்பைக் கொட்டிக் கொள்வோம். அதே இயல்புகளையும் அன்பையும் குலோத்துங்கன் அவர்களிடம் கண்டேன். அதனால் அவர் என் உள்ளத்தில் நீங்கா இடம்பெற்றார்.

‘‘கண்ணியம்’’ இதழில் தமிழ் இலக்கியம், இன மானம், பிற்பட்டோர் நலன் இவற்றைத் தோய்த்து எழுதுவார்.

தமிழுக்குத் தொண்டு செய்பவர்களின் படங்களை ஒவ்வொரு இதழிலும் வெளியிட்டுப் பாராட்டுவார். பல தமிழின இணையர்களின் படங்களையும் வெளியிட்டு அவர்களின் பெருமைகளைப் பதிவு செய்வார்.

தமிழ்நாட்டின் நிலைகண்டு இரண்டொரு தடவைகள் இருவரும் கலந்துபேசினோம்.

அப்போது, தன் சொந்தப் பொது வாழ்வில், தனக்கு ஏற்பட்ட பகையுணவர்களை வெளிப்படையாக என்னிடம் கூறினார். 2005இல், நானும் அவரும் ம.தி.மு.க. தோழர் டி.ஆர்.ஆர். செங்குட்டுவனும் இணைந்து தமிழ் நாட்டு நீர் நிலைகள் பாழாவதைப் பற்றி விரிவாகப் பேசினோம். நாங்கள் மூவரும் இரண்டு மகிழுந்துகளில் சென்னையிலுள்ள பெரிய நீர்நிலைகள் அனைத்தையும் ஒரு நாளில் சுற்றிப் பார்த்தோம்.

அடுத்த நாள் நாங்கள் இருவரும் மட்டும் புறப்பட்டு சேத்தியாத்தோப்பு வீராணம் ஏரி, செயங்கொண்டம் பொன்னேரி இவற்றை ஒரு நாள் ஆய்வு செய்தோம்.

ஆ.கோ. குலோத்துங்கன் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன், மருத்துவமனையிலிருந்து விடுபட்டு, அவருடைய மகள் வீட்டில் தங்கியிருந்த போது ஒரு தடவை நேரில் சந்தித்தேன். நீண்ட நேரம் உரையாடினோம்; அதன் பிறகு, எனக்குத் தொலைப்பேசி செய்து அறிவித்துவிட்டு, தம்மிடமிருந்த நூல்களில் சிலவற்றை இரண்டு தடவைகளில் அம்பத்தூர் பெரியார் - நாகம்மை நூலகத்துக்கு அன்பளிப்பாக அளித்தார்.

நான் 2017 மே திங்களில் நோய்வாய்ப்பட்டதால் அதிகமாக வெளியிடங்களுக்குச் செல்ல முடியவில்லை.

அவர் மறைந்த 7.9.2018, 8.9.2018 நாள்களிலும் வயிற்றோட்டம் காரணமாக, அவருக்கு நான் இறுதி அஞ்சலி செலுத்தத் தவறிவிட்டேன்.

அவர்தம் வாழ்நாளில் திராவிட இயக்கங்களில் பணியாற்றினார்; ‘‘கண்ணியம்’’ இதழ் வழியாக தமிழ், தமிழின நலனுக்கு இறுதி மூச்சு வரை உழைத்தார்; மறைந்த பின்னரும் தமிழர் நெஞ்சங்களில் அவர் வாழ்வார்.

மா.பெ.பொ.க. சார்பில் வாலாசா வல்லவன், கலச இராமலிங்கம், ப. வடிவேலு, துரை கலையரசு, கவிஞர் காவிரிநாடன் ஆகியோர் 8.9.2018 அன்று இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**வாழ்க, ஆ.கோ. குலோத்துங்கன் புகழ்!**

**- வே.ஆனைமுத்து**



# பெரம்பூர் க. கந்தன் மறைவு



சிறந்த பகுத்தறிவாளரும், திராவிடர் இயக்க உணர்வாளருமான க. கந்தன் அவர்கள் 4.1.1976 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 - 6.00 மணிக்கு இராகு காலத்தில் பெரியார் திடலில், கலைஞர் தலைமையில் மணியம்மையார் முன்னிலையில் வீரமணி அவர்கள் வரவேற்புரையாற்ற இராதா அம்மையாரைச் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டவர். தன் மகள் அறிவுக்கொடிக்கும், மகன் தமிழ்ச்செல்வனுக்கும் இராகு காலத்தில் சாதி மறுப்புத் திருமணங்களை நடத்தி வைத்துக் கொள்கைக் குன்றமாகத் திகழ்ந்தவர்.

**அவர் துணைவியார் இராதா அம்மையார் இறந்த போது சடங்குகள் எதுவுமின்றி, எரியூட்டினார். வழி நெடுகிலும் பூக்களைக் கொட்டாமல், பூ மாலைகள் அனைத்தையும் ஒரு பெரிய வண்டியில் ஏற்றிச்சென்று குப்பையில் கொட்டிட வைத்தார்.**

தன் வீட்டில் இராதா-கந்தன் நினைவு நூலகம் அமைத்தார். அறிவுக்கொடி என்ற திங்கள் இதழை 1.1.2005 முதல் 30.4.2008 வரை மிகுந்த இழப்பீட்டில் நடத்தினார்.

பெரம்பூரில் பெரியார் அமைப்புகள் கூட்டம் நடத்துவதற்கு உதவி செய்து வந்தவர் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இதய நோய் தாக்கியதில் உடல்நலம் கெட்டு விட்டது. 31.8.2018 வெள்ளி மாலை இயற்கை எய்தினார். முன்னாள் நடுவண் அமைச்சர் டி.ஆர். பாலு, டி.கே.எஸ். இளங்கோவன், எஸ். சுதர்சனம், முன்னாள் அமைச்சர் பரிதி இளம்வழுதி, கவிஞர் கலிபூங்குன்றன், க. திருநாவுக்கரசு உள்ளிட்டோர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

கந்தன் அவர்களின் படத்திறப்பு, நூல் வெளியீடு, ஆவணப்பட குறுந்தகடு வெளியீடு நிகழ்வுகள் 22.9.18 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ரெட்டேரி புதிய இலட்சுமிபுரம் 19, கடப்பாலை சாலையில் அமைந்துள்ள கந்தன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் க. கந்தன் படத்தினைத் திறந்து வைத்தார். முன்னாள் அமைச்சர் பரிதிஇளம்வழுதி, கந்தன் வாழ்க்கை வரலாறு சிறு நூலினை வெளியிட்டார். பகுசன் சமாஜ் கட்சியின் பொறுப்பாளர் பெரியார் அன்பன் பெற்றுக்கொண்டார். கந்தன் வாழ்க்கைச் சுவடுகள் குறும்படத்தின் வட்டுவை வழக்குரைஞர் அ.அருள்மொழி அவர்கள் வெளியிட, உதயை வீரய்யன் பெற்றுக் கொண்டார். வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் த. வெள்ளையன், திருவள்ளூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. கிருட்டிணசாமி, மறைமலைநகர் பிச்சைமுத்து உள்ளிட்டோர் உரையாற்றினர். மா.பெ.பொ.க.சார்பில் வாலாசா வல்லவன், ப.வடிவேலு ஆகியோர் படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.


## பெரியார் பேசுகிறார்

*பொது உடைமை வேறு, பொது உரிமை வேறு பொது உடைமை என்பது சம பங்கு என்பதாகும்; பொது உரிமை என்பது சம அநுபவம் என்பதாகும். தனி உரிமையை முதலில் ஒழித்து விட்டோமானால், தனி உடைமையை மாற்ற அதிகப் பாடுபடாமலே இந்த நாட்டில் பொது உடைமை ஏற்பட வசதி உண்டாகும். பொது உரிமை இல்லாத நாட்டில் ஏற்படும் பொதுவுடைமை மறுபடியும், அதிக உரிமை இருக்கிறவனிடந் தான் போய்ச் சேர்ந்து கொண்டே இருக்கும் என்பது பொது வுடைமைத் தத்துவத்திற்குப் பாலபாடம் என்பதை மக்கள் உணரவேண்டும்.*

*- குடிஅரசு : 25-03-1933*

# எனது 95வது பிறந்தநாள் செய்தி

- பெரியார் ஈ.வெ.ரா.



எனது 95ஆம் ஆண்டு பிறந்த நாள் துவக்கத்துக்கு வழமைபோல் ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுதவேண்டியிருக்கிறது. அதை முன்னிட்டு இக்கட்டுரை எழுதுகிறேன், அப்படி எழுதப்படும் இக் கட்டுரை என்னால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியான கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம். ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால், அடுத்த ஆண்டு மலர் எழுதப்பட வேண்டிய காலத்தில் நான் இருப்பேனோ, இல்லையோ என்கிற பிரச்னை மாத்திரமல்லாமல், எழுதும்படியான வாய்ப்பு இருக்குமோ, இருக்காதோ என்பதே முக்கிய காரியமாகும். ஏனெனில், இன்னும் நாம் இருப்பது போலவே அதாவது, இந்திய ஆட்சி என்பதற்குள் பிரஜையாகவும், சமுதாயத்தில் நாலாஞ் சாதி (சூத்திர மக்களாகவும்) சட்டப்படி, சாஸ்திரப்படி பார்ப்பானின் தாசி மகன் என்னும் பெயருடன் நமது தாய்மார்கள் பார்ப்பானின் தாசிகளாகவும் இருக்கும் தன்மையாலேயே இருப்போமா என்கின்ற கருத்தைக் கொண்டே இப்படி எழுதுகிறேன். !

**நம்மில் பலர் சிறையில் இருக்க நேரிடலாம்**

இந்திய அரசியல் சட்டப்படி நாம் இந்திய ஆட்சியில் பிரஜையாய் இருக்கும்வரை இந்துவாய் அதாவது, கிறிஸ்துவனாகவோ, முஸ்லீமாகவோ நாம் மதம் மாற்றிக் கொள்ளாதவரை நாம் நமது பண்டார சன்னதிகள் உட்பட பவுத்தனுக்கும், ஜெயினனுக்கும் சமானமாக இருக்கும் படியாக இருந்தாலும், பகுத்தறிவுவாதியாக இருந்தாலும், வேறு எந்தப் பெயரில் வாழ்ந்து வருபவனாக இருந்தாலும் சூத்திரனாகத்தான், பார்ப்பானின், தாசி மகனாகத்தான் இருந்தாக வேண்டும். இது தான் இன்றைய இந்திய அரசியல் சட்டமாகும். இந்த சட்டத்தைத் திருத்தவோ மாற்றவோ நம் மக்களுக்கு ஒருநாளும் சக்தியோ, உரிமையோ ஏற்படும் என்று கருதவே முடியாத நிலையில் இருக்கிறோம். அது மாத்திரமல்லாமல் இந்திய ஆட்சியில் இருந்து தமிழ் நாட்டை விலக்கிக் கொள்ள முயற்சி செய்தே ஆகவேண்டிய ஒரு கட்டாயமான - நிர்ப்பந்தமான நிலையில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நாம் இந்திய ஆட்சியிலிருந்து விலகிக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுமா என்பது பற்றி நமக்கு முடிவு செய்து கொள்ள முடியாமல் இருந்தாலும் இம் முயற்சியில்

நாம் பலர் சிறையில் இருக்க நேரிடலாம் என்கிறதாலேயேதான் இந்தப்படி எழுதுகிறேன். உடனடி யாக விடுதலை முயற்சியில் ஈடுபட வேண்டும் நமக்கு இன்றைய இந்திய ஆட்சியில் அரசியல் பிரச்னை எப்படி இருந்தாலும், சமுதாயப் பிரச்னையில் நாம் இன்று இருக்கும் இழி தன்மையில் இருந்து, அதாவது சூத்திரனாக, தாசி மகனாக நம் தாய்மார்கள் தாசிகளாக சட்டப்படி, சாத்திரப்படி இருக்கும் நிலைமையை மாற்றிக்கொள்ள முயற்சிக்காமல் நாம் இருக்க முடியுமா? இந்தியாவில் நாம் இருக்கும்வரை இந்துவாகத்தானே இருந்து ஆகவேண்டும். இந்து என்றாலே, முஸ்லீம், கிறிஸ் துவம் தவிர மற்ற யாவருமே சூத்திரர் தாசி மக்கள் தான் என்று இருப்பதால், ஏதாவது முயற்சி செய்து தான் ஆகவேண்டும். நம் மக்கள் எளிதில் மதம் மாறமாட் டார்கள். மதம் மாறுவதை இழிவாய்க் கருதுபவர்களா வார்கள். ஆதலால் நாம் உடனடியாக விடுதலை அதாவது இந்திய கூட்டாட்சியிலிருந்து விலகி சுதந்திரத் தமிழ் நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டிய வர்களாக இருக்கிறோம். இம் முயற்சிக்கு இன்றைய நம் தி.மு.க. ஆட்சி இணங்கும் என்று கருதமுடியாது.

ஏனெனில், தி.மு.க. ஆட்சி விரும்புவதெல்லாம் இந்திய கூட்டாட்சி ஆதிக்கத்திற்கு உள்பட்ட மாகாண சுயாட்சிதான் அது விரும்புகிறது. மாகாண சுயாட்சி என்றால், அரசியலில் தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்து கொள்ள முடியுமே தவிர சமுதாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக ஒரு காரியமும் செய்ய முடியாது.

'இந்து' என்றால் சட்டப்படியான விளக்கம் இந்திய அரசியல் சட்டத்தில் சமுதாய (மத) சம்பந்தமான காரியங்களைப் பற்றி பழைய மனுதர்ம நிலையை மிகமிகப் பலப்படுத்திக்கொண்டபடியிருக்கிறது. உதாரண மாக சொல்ல வேண்டுமானால், கர்ப்பகிரகத்திற்குள் சூத்திரன், அதாவது பண்டார சன்னதி உட்பட இந்து என்ற தலைப்பில் வரும் எவருமே, பார்ப்பான் தவிர்த்து எவருமே செல்ல முடியாதென்று உயர்நீதி (சுப்ரீம்) மன்ற தீர்ப்பு இருப்பதினாலும், இன்னும் கோவிலுக்கு சாமி தரிசனத்திற்கென்று போகும் யாருமே தீண்டத் தகாதவர்கள்போல் வாயில்படிக்கு வெளியில் தான் எட்டி நிற்கவேண்டும் என்றால், மற்றப்படி எ தில் நாம் மாறுதலைக் காணமுடியும் ?

இன்று அமுலில் இருக்கும் இந்து லா என்னும் சட்டத்திலும், பல உயர் நீதி மன்றங் களின் தீர்ப்பிலும், பார்ப்பனரல்லாத இந்து மக்கள் என்பவர் களை மிகமிக இழிவாகக் கூறி, நிலைநிறுத்தப்பட்டிருக்கிறது. இந்து என்னும் சொல்லுக்கு சட்டத்தில் கொடுத்திருக்கும் விளக்கம் என்னவென்றால், "கிறிஸ்துவர்கள்- முஸ்லீம் கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே இந்துக்கள் ஆவார்கள்." இதன்படி நாத்திகன், பகுத்தறிவு வாதி, பரதேசி முதலிய சகலரும் இந்துக்கள் ஆகி சூத்திரர், பார்ப்பானின் தாசி மகன் என்று ஆகிவிடுகிறார்கள்.

**சுயமரியாதை இயக்கத்தின் 50 வருட சாதனை**

நான் முதலில், நான் இந்து அல்ல என்று சொல்லி விட்டால் இழிவு நீங்கிவிடும் என்று தான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்க ஆரம்பித்த பிறகு கிறிஸ்து வர்கள், முஸ்லீம்கள் தவிர்த்த, இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் இந்துக்கள் - இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள் என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலேயே தீவிர முயற்சி எடுக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இன்று நம் நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில் தான் முக்கிய கவனம் இருக்கிறது. அன்றியும் நாட்டுப் பிரிவினை என்றால், எல்லா மக்களுமே பயப்படு கிறார்கள். காரணம் பதவி கிடைக்காதே என்கின்ற காரணம் மாத்திரமல்லாமல், சிறைக்குச் செல்ல வேண்டுமே என்றும் பயப்படுகிறார்கள். 50 வருஷ காலமாக சுயமரியாதை இயக்கம் சாதித்தது என்ன என்று பார்த்தால், சிறிது படிப்பு - பல பதவி உத்தியோகம் பெற நேர்ந்ததோடு அரசியலில் பார்ப்பனர் கொட்டத்தை நல்ல அளவுக்கு அடக்கிற்று என்பதல்லாமல் சமுதாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நல்ல அளவுக்கு பலம் பெற்றுவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். எனவே, நாம் சட்டத்தைப் பற்றி பயப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப் படாமலும், சுதந்திரத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்து கொண்டு முன்வர வேண்டியது ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியமான காரியம் என்பதை பணிவோடு தெரி வித்துக் கொள்கிறேன். "சுதந்திரத் தமிழ்நாடு எனது இலட்சியம் " என்ற சொற்களை ஒவ்வொருவரும் இலட்சியச் சொல்லாகக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். பதினாயிரக் கணக்கில் பாட்ஜுக்கு ஆர்டர் கொடுத்து தயார் செய்து மக்களுக்கு வினியோகிக்க ஆசைப்படுகிறேன். பொது மக்களுக்கும் இதுவே இலட்சியச் சொல் (கூப்பாடாக) லாக இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். பொது மக்களே! இளை ஞர்களே! பள்ளி, கல்லூரி மாணவர் களே! மாணவிகளே! உறுதி கொள்ளுங்கள்! உறுதி கொள்ளுங்கள்!! உறுதி கொள்ளுங்கள்!!!

## நீங்கள் வளம்பெற

# சிந்தியுங்கள்


*உங்கள் தயாரை, அக்காள் தங்கையைப் பற்றி ஒழுக்கக் குறைவாக ஏதாவது பேசினால் நீங்கள் அவனை விட்டு விடுவீர்களா? கையில் கத்தியை எடுத்துக்கொண்டு அவனை கொலை செய்யாமல் விடமாட்டீர்கள். அதற்காக எந்த தண்டனையையும் ஏற்க தயாராக இருக்கிறீர்கள். ஆனால் பார்ப்பான், உங்கள் தாய், அக்காள் தங்கையை தனது வைப்பாட்டி என்கின்றான். உங்களைத் தனது வைப்பாட்டி மகன் என்கின்றான். வாயால் மட்டும் சொல்லாமல் சாஸ்திரத் திலும் சட்டத்திலும் எழுதி வைத்துக் கொண்டிருக்கின்றான்.* **அதைப் பற்றி நீங்கள் ஆத்திரமடையவில்லையே. உங்க ளுக்கு கொஞ்சமாவது மான ரோஷமிருந்தால்** *உங்களை தேவடியால் மகன் என்று சொல்கிற பார்ப்பானை, உங்களை தேவடியாள் மகனாக்கி வைத்திருக்கின்ற மதத்தை, சாஸ்திரத்தை, கடவுளை ஒழிக்காமல் இத்தனை நாள் விட்டு வைத்திருப்பீர்களா?*

**– தஞ்சை நகரில் தந்தை பெரியார் அறிவுரை (15-9-1971)**

நூல் மதிப்புரை

# கீழடி

## தமிழ் இனத்தின் முதல் காலடி




புதுப் புது நூல்கள் பல நாள்தேறும் வெளியிடப்படுகின்றன. ஒவ்வென்றையும் ஒவ்வெரு நேக்கத்துடன் நூலாசிரியர்கள் படைக்கின்றனர். அந்த நேக்கத்தைக் கெண்டும், அதை அந்நூலாசிரியர் வெளிப்படுத்தும் திறமையைக் கெண்டும் அந்நூலின் சிறப்பு அமைகிறது. அவ்வகையில் "கீழடி தமிழ் இனத்தின் முதல் காலடி" எனும் இந்நூல் நேக்கத்திலும் அதை வெளிப்படுத்தும் திறமையிலும் மிக உயர்வானது.

இந்நூல் தமிழ் இனத்தின் தென்மையை மிகத் தெளிவாகவும், அழகாகவும் அதே சமயம் எளிமையாகவும் பறை சாற்றுகிறது. ஆகவே தமிழ் அறிந்த மக்கள் அனைவரும் இந்நூலை வரவேற்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர். அது மட்டுமா? மறைந்து கிடக்கும் உண்மை வெளி வருகின்றது என்றால் அதை வரவேற்க உலக மக்கள் அனைவருமே கடமைப்பட்டவர்கள் ஆவர். இந்நூல் மறைந்து கிடக்கும் பல உண்மைகளை வெளிக் கெணர முயலும் கீழடி அகழாய்வு பற்றி முழுவதுமாக விளக்குவதால் உலக மக்கள் அனைவருமே வரவேற்க வேண்டிய ஒரு நூலாகும். ஆகவே வாய்ப்பு கிடைப்பவர்கள் தங்களுக்குத் தெரிந்த மெழிகளில் மெழி பெயர்த்து வெளியிடுவது மனித குலததிற்குச் செய்யும் உண்மையான வரலாற்றுத் தெண்டாக அமையும்.

கீழடி அகழாய்வுக்ககாத் தேர்ந்தெடுக்கப் பெருத்தமான இடம் தான் என்பதன் நுணுக்கமான காரணங்களைத் தெல்லியல் ஆய்வுத் துறைக் கண்காணிப்பாளர் திரு.அமர்நாத் ராமகிருஷ்ணனின் வாய்மெழி மூலமே இந்நூலரிரியர் திரு.நீ.சு.பெருமாள் வெளிக் கெணர்கிறார். அது மட்டும் அல்ல; பழந்தமிழ் இலக்கியங்களில் இருந்தும், தமிழ் அறிஞர்களின் ஆய்வுரைகளில் இருந்தும் சான்று காட்டுகிறார்.

இந்நூல் ஏழு கட்டுரைகளையும், தெல்லியல் ஆய்வு நிபுணர் திரு,அமர்நாத் ராமகிருஷ்ணனுடனான நேர்காணலையும் கெண்டு உள்ளது. இந்நூலில் உள்ள ஒவ்வெரு வாக்கியமும் பெருட்செறிவு கெண்டதாக உள்ளதானது நூலாசிரியரின் பரந்த ஆழமான அறிவுத் திறனை வெளிப்படுத்துகிறது.

தமிழ் அறிஞர் அ.சா.ஞானசம்பந்தர் நிறுவிய சென்னையில் உள்ள சேக்கிழார் ஆராய்ச்சி மையம் 2018ஆம் ஆண்டில் சிறந்த நூலாக இந்நூலைத் தேர்ந்தெடுத்து விருதும் ரூ.10,000 பண முடிப்பும் வழங்கி உள்ளது.

இந்நூல் மெத்தம் 104 பக்கங்களைக் கெண்டுள்ளது. இந்நூலாசிரியர் இந்நூலைப் படைக்க வெளிப்படுத்தியுள்ள நுண்ணறிவைக் கணக்கில் கெண்டு இந்நூலின் விலையை நிர்ணயிக்க முயன்றால், சாதாரண மக்கள் அதை வாங்கிப் படிக்க முடியாமலேயே பேய்விடும். அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும் என்ற நன்னேக்கத்துடன் இந்நூலின் விலை ரூ.100 என நிர்ணயித்து இருக்கிறார்கள். இந்நூல், மல்லிகை புக் சென்டர், 11. மேல வெளி வீதி, மதுரை - 625001 (மதுரை இரயில் நிலையம் எதிரில்) கிடைக்கும். மேலும் நீ.சு.பெருமாள், 1/73 எண் 39 ஜீவா நகர், எமனேஸ்வரம், பரமக்குடி - 623701, கைப்பேசி எண் 9442678721 அல்லது 7904234672இல் நூலாசிரியரைத் தெடர்பு கெண்டும் பெறலாம்.

இந்நூல் தமிழ் அறிந்தேர் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல். இராமியா

**(ஆர்.ஆர்.குபேந்திரன்)**

உலகில் மனிதன் மற்ற உயிரினங்களைவிடச் சிறந்த வனாகக் கருதப் படுவதற்குக் காரணம், அவன் எல்லையற்ற அறிவுச் சக்தி பெற்றிருப்பதுதான், மற்ற நாட்டு மனிதன் அந்த அறிவைப் பயன்படுத்தி மிகமிக முன்னேறிக் கொண்டு வருகிறான். ஆனால் இந்த நாட்டு மனிதனோ, அந்த அறிவினைப் பயன்படுத்தாத காரணத்தால் மிகமிகப் பின்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறான். இங்கு நாம், ஞான பூமியென்று சொல்லிக்கொண்டு கோயில் குளம் கட்டிக்கொண்டு இருக்கிறோம். அங்கோ அண்ட வெளியில் பறந்து உலகையே பிரமிக்கச் செய்கிறார்கள். **(வி. 22. 5. 61; 1: பெ. செ.)**

மற்ற நாட்டில் எல்லாம் அறிவுக்குத்தான் மதிப்பு. அறிவைத்தான் நம்புவான். அறிவைத்தான் ஆதாரமாகக் கொள்வான். இந்த நாட்டிலோ குப்பைக் கூளங்கள், சாத்திர சம்பிரதாயங்கள், கடவுள், மதம் இவைகளைத்தான் நம்புகிறான். **(வி. 10. 7. 61 ; 3:2)**

# பலாபலன்

– பாவலர் வையவன்

கண்டுபிடிக்கப்பட்ட
ஆயுதங்கள் அனைத்தும்
பூமியின் மீதே
போர்த்தொடுக்கலாயின

தீட்டின மரத்திலேயே
கூர் பார்ப்பது போல
ஊட்டின தாய்க்கே
உலை வைத்தது அறிவியல்

எதன்மீது நின்று
இந்த உலகம் வளர்ந்ததோ
அதன் மீதே கொட்டுகிறது
அத்தனை நச்சுகளையும்
இப்போது

உழுதவலி பொறுத்துக்கொண்டு
அமுதளித்த அன்னை வயிற்றில்
அரங்கேறுகின்றன
அணுகுண்டுச் சோதனைகள்

அழிவாயுதங்களைச் சேமிக்கும்
கிடங்காகிவிட்டது
அன்னையின் கருப்பை

மலைகளையும் காடுகளையும்
நதிகளையும் சிதைத்து
'நாகரிகம்' வளர்க்கிறார்கள்
பிள்ளைகள்

நட்டு வளர்த்து
அறுத்துத் தின்னவன்
இன்று
மீண்டும் மீண்டும் அதை
விற்றுத் தின்கிறான்

கண்டங்களாய் நிலத்தைக்
கடல் பிரித்தது என்றாலும்

கண்டதுண்டமாய்ப்
பிரித்துவிட்டோம்
நாம்

வாழ்வதற்கு அனுமதித்த பூமியை
வணிகக் கடையாய் ஆக்கியதே
நம் புரட்சி

நச்சாறுகள் வந்துகலக்கும்
வாழ்க்கைக் கடலில்
செத்து மிதக்கின்றன
உறவு மீன்கள்

கடவுளை நோக்கிய
பயணந்தான் எனினும்...
கார்ப்பரேட் மயானங்களிலேயே
சென்று முடிகிறது

எல்லார் வாழ்க்கையையும்
விழுங்கி ஏப்பம்
விட்டுவிடுகின்றன
வாக்குச் சாவடிகள்

கண்டுபிடிக்கப்பட்டவைகளிலேயே
அணு ஆயுதங்களைவிட
மிகப் பயங்கரமானது
'வாக்குப் பெட்டி'

செய்த கேடுகளின் பலாபலனை
அறுவடை செய்யப்போகிறார்கள்

'செல்போனில்'
தலைகவிழ்ந்து கொண்டிருக்கும்
நம் தலைமுறைகள்.

# புதுச்சேரியில் புலவர் கி.த.பச்சையப்பன் நினைவேந்தல்

கி.த.ப. என அன்பாக அழைக்கப்பட்ட புலவர் கி.த.பச்சையப்பனார் நினைவேந்தல் நிகழ்ச்சியைப் புதுச்சேரியில் புதுவைத் தமிழ்ச்சங்கத்தில் திருவள்ளுவராண்டு 2049 கன்னி 14 (30.09.2018) அன்று காலை 9.30 மணியளவில் இலக்கியப் பொழில் இலக்கிய மன்றமும், இலக்கணச் சுடர் இரா.திருமுகனார் நினைவு அறக்கட்டளையும் இணைந்து நடத்தியது. நிகழ்ச்சிக்கு எழுச்சித் தமிழ்மாமணி பெ.பராங்குசம் தலைமையேற்று தலைமையுரையாற்றினார்.

முன்பு புலவர் செ.இராமலிங்கம் வரவேற்புரையாற்றினார். புலவர் அரங்க.நடராசன், புலவர் பூங்கொடி பராங்குசம் முன்னிலை வகித்தனர். திரு.இரா.கோவிந்தசாமி நினைவு மலரை வெளியிட்டார். ஆசிரியர் மாமணி தெ.வெ.சஞ்சீவிராயன் கி.த.ப.வின் படத்தைத் திறந்து வைத்தார். புலவர் நாகி, மேரா. இராச.குழந்தைவேலனார் ஆகியோர் நினைவேந்தல் உரையாற்றினார். நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த பாவலர் அரங்க.விசயரங்கம் நன்றியுரையுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

# கைப்பேசியின் கணக்கு

உலகத்திலேயே மக்கள் தொகை அதிகம் உள்ள நாடுகளில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. இப்பொழுது இந்தியாவில் மக்கள் தொகை சுமார் 130 கோடியைத் தாண்டியுள்ளது. மக்கள் தொகையில் கண்ட வளர்ச்சி வாழ்க்கையில் வளர்ச்சி காண முடிய வில்லை. கைப்பேசி இப்பொழுது சுமார் 105 கோடி (80 விழுக்காடு) மக்கள் பயன்படுத்துகின்றனர். மீதி யுள்ளோர் குழந்தைகள் மற்றும் இயக்க இயலாதோர். கைப்பேசி இணைப்பு அட்டை இரண்டு அல்லது மூன்று இணைப்பு அட்டை பொருத்தியுள்ளோர் சுமார் 55 கோடி. ஆக மொத்தம் 160 கோடி கைப்பேசி இணைப்பு அட்டை பொருத்திப் பயன்படுத்தப்படுகின்றது.

பொருத்தப்பட்ட ஒவ்வொரு கைப்பேசி இணைப்பு அட்டைக்கும் ஒரு நாளுக்குக் குறைந்தது ரூ.2/- சேவை வரியாக இந்திய அரசுக்குக் கிடைக்கின்றது. ஒரு அட் டைக்கு ரூ.2/- என்றால், சுமார் 160 கோடி இணைப்பு அட்டைக்கு சுமார் ரூ.320/- கோடி இந்திய அரசின் ஒருநாள் வருமானம் ஆண்டுக்கு சுமார் ரூ.1,31,000/- கோடி வருமானம்.

ஒரு துறையில் இவ்வளவு சேவை வரி என்றால் மற்ற துறைகளில் வரும் சேவை வரி, வருமான வரி, விற்பனை வரி, சொத்து வரி, தொழில் வரி, தொழி லாளர் வரி, சாலை வரி, சாக்கடை வரி, தண்ணீர் வரி, கலால் வரி, சுங்க வரி போன்ற பல வரிகளை நுகர் வோராகிய மக்கள் மீது பாமரன் முதல் பணக்காரன் வரை அனைவரிடமும் வரி வசூல் செய்கின்றனர். வழக்குரைஞர், பட்டையக் கணக்கர், பொறியாளர், மருத்துவர் உள்ளிட்டோர் சேவை வரி கட்ட வேண்டும். இந்தச் சேவை வரி சேவை பெறுவோரே சேர்த்துக் கட்டணம் கட்டுகின்றனர். பிள்ளை பெற்றாலும், சேவை வரியைச் செலுத்த வேண்டும்.

இப்படி அனைத்து வழிகளிலும் வரியை வசூலித்த இந்திய அரசு பாமரன் படிக்கக்கூடாது என்பதற்காக நுழைவுத் தேர்வு என்று தேர்வு வைத்துத் தடுத்துள்ளது. ஓட்டு பெற்ற பின் மக்களை மதிக்காத அரசியல்வாதி களை, கொள்ளையர்களைத் தேர்வு செய்யாமல், நல்ல வர்களைத் தேடி கண்டு தேர்தலில் தேர்ந்தெடுங்கள்!

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி அக்டோபர்-2018

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - அக்டோபர்-2018

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**